
# திருக்கோயில்

மார்ச் 1990 விலை ரூ.3.







திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்த சாரதி ஆலயத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவு நாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு கி. மனோகரன் எம்.ஏ. அவர்கள் கலந்து கொண்டார்கள். உதவி ஆணையாளர் திரு இரா. சுப்பிரமணியன் பி.ஏ. பி.எல். உடன் உள்ளார்.

திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் தவத்திரு சுவாமி ராமதாசர் கலந்து கொண்டார். துணை ஆணை யாளரும் ஆலய நிர்வாக அதிகாரியுமான திரு வே. முனியசாமி எம்.ஏ. பி.எல்., உடன் உள்ளார்.

முகப்பு:
இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியில்
அமைந்துள்ள
இந்து சமய அறநிலையத்துறை அரங்கின்
அழகிய முன்புறத் தோற்றம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 சுக்கில ஆண்டு பங்குனி மார்ச் 1990 விலை ரூ. 3-00 | மணி 3

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று
—மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

ஓராண்டில் அறநிலையத்துறையின் ஒப்பற்ற சாதனைகள்
—அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ.

காலத்தேரில் பார்த்தசாரதி ஆலயம்
—பேராசிரியர் தேவ நடராஜன்

சித்திர பாரதம்
—செவ்வேள்

சிங்கவர்மன் கண்ட சிதம்பர தரிசனம்
—நடராசன் அடிமை

சீர்காழி முத்துத் தாண்டவர்
—பேராசிரியர் மு. அருணாசலம்

நினைப்பினால் கோயில் செய்த நின்றவூர் பூசலார்
—புலவர் சு. நாராயணசாமி

அஞ்சல் என்றிடும் ஆனைக்கா அண்ணலே
—தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

தீர்த்தங்கள் நிறைந்த தீர்த்தமலை
—டி.என். இலட்சுமண குருக்கள்

விளக்கிட்டார் பேறு சொல்லின்
—மு. கிருட்டிணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)


கந்தவேள் கருணை
—திருமுருக கிருபானந்த வாரியார்.

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த.அமிர்தலிங்கம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்



சற்றுக் கண்ணொளி மங்கியமுதியவர் ஒருவருக்குக் காதுகளும் ஓரளவு மந்தம். வழியில் அவருக்குத் துணையாக அவரது பேரப்பிள்ளை வந்து கொண்டிருந்தான். அறவே அவரது விழிகளின் ஒளி பழுதாகி விடாத காரணத்தால் அவரைக் கரம் பிடித்து அழைத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை. எனினும் பேரப்பிள்ளை, தன் பாட்டனுக்குத் துணையாக அவர் அருகாமையிலேயே நடந்து கொண்டிருந்தான்.

சிறிது தொலைவில் நூற்றுக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு மேடை, அந்த மேடைமீது ஒரு மனிதன் நின்றுகொண்டிருந்தான். முதியவரின் கண்களுக்குத் தெளிவாகத் தெரியாவிட்டாலும் மேடையில் மனிதன் ஒருவன் இருப்பதும் அவனைச்சுற்றிக் கூட்டம் இருப்பதும் நிழலாட்டம் போலத் தென்பட்டன. ஒளியுமிழும் விழிகள் படைத்த அந்த இளைஞனை நோக்கி முதியவர், ''அங்கே என்னப்பா கூட்டம்?'' என்று வினவினார். இளைஞன், கண்களுக்கு மட்டும் வேலை தராமல், காதுகளுக்கும் வேலை கொடுத்துக் கூர்மையாகக் கவனித்து விட்டு, சிறிது நேரங்கழித்துத் தன் பாட்டனாருக்குப் பதில் சொன்னான்.


''தாத்தா! அங்கே ஒருவன் தோப்பிலே நின்று கொண்டு பழங்களைப் பறிக்காமல் காய்களைப் பறித்துத் தின்று கொண்டிருக்கிறான். அந்தக் காட்சியை மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.''

பேரனின் பதிலைக் கேட்டு முதியவர் வியப்படைந்தார். தன் கையை நெற்றிக் கருகே கொண்டுபோய், கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு ஆழமாகப் பார்த்தார்.

''என்னப்பா! என்னைக் கேலி செய்கிறாய்? அங்கு தோப்பு எதுவுமே தெரியவில்லை. மக்கள் கூட்டம்தான் இருக்கிறது. யாரோ ஒருவன் கைகளை மேலும் கீழும் வேகமாக அசைத்துக் கொண்டிருக்கிறான். மரங்களும் இல்லை. காய்களும் இல்லை. நீ என்னை முழுக் குருடனாகவே ஆக்கிவிட்டாயே!''

பாட்டனின் பதிலைக் கேட்டுப் பேரன் சிரித்துக் கொண்டான். இன்னும் அருகாமையில் சென்றால் அவருக்குத் தான் அளித்த விடைக்கான விளக்கம் கிடைக்குமென்று கருதி, அவரை அந்தக் கூட்டத்தின் பக்கம் அழைத்துச் சென்றான். மேடையில் இருப்பவன் உரக்கப் பேசியது முதியவர் காதிலும் விழுந்தது.

''பொது மக்களே! ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நம்மை எதிர்ப்பவர்கள் அறிவற்றவர்கள். அவர்களின் பிறவி



யிலேயே எனக்குச் சந்தேகம். அவர்களை நாட்டில் நடமாட விடுவதே பெருங்குற்றம். கருத்துக்குக் கருத்து மோதவிடு என்றெல்லாம் அவர்கள் பேசுவார்கள். தேவையில்லை. கத்திக்குக் கத்திதான் மோத வேண்டும். அந்த நாய் மனிதர்களின் தலையை வெட்டிக்கடலில் எறிய வேண்டும். என்னை எதிர்த்துப் பேசுவோர் யாராயினும் அவர்களை நான் பூச்சி புழுக்களாகக் கருதுகிறேன்.''

இந்தச் சொற்பொழிவைப் பாட்டனும் பேரனும் கேட்டார்கள். சற்று மந்தமான செவிகளாக இருந்தபோதிலும் முதியவர் அவைகளைக் கைகளால் பொத்திக்கொண்டு, 'சே, சே, என்ன இழிவான சொற்கள். கருத்தரங்குகள் இப்படியா கெட்டுப் போய்விட்டன'' என்று முணுமுணுத்தார்.

''தாத்தா! மரமெங்கே? காய் எங்கே என்று கேட்டீர்களே, இப்போது நன்றாகத் தெரிகிறதா?''

பேரன் புன்னகை சிந்தியவாறு கேட்டான். முதியவர் வேண்டுமென்றே பேரனைப்பார்த்து எதுவும் விளங்காதவர்போல, ''என்னடா விளையாடுகிறாய்? யாரோ ஒருவர் பேசுகிறார். அவ்வளவுதானே! அவர் எங்கே பழங்களை விடுத்துக் காய்களைச் சாப்பிடுகிறார்'' என்று கேட்டார்.

''தாத்தா! இனிய வார்த்தைகள்நிறைய இருக்கும்போது, அவைகளை ஒதுக்கி விட்டு இழிவும் கடுமையும் நிறைந்த வார்த்தைகளைக் கூறுவது; கனியிருக்கும்போது அதனை உண்ணாமல் காய்களைப் பறித்து தின்பதைப் போன்றதாகுமென இன்று காலையில் எங்கள் ஆசிரியர் குறளுக்கு விளக்கம் அளித்தார். அதற்குச் சரியான எடுத்துக்காட்டு இந்தக் கூட்டம்'' என்று பேரப்பிள்ளை கூறியதும், முதியவர் அந்த இளந்தளிருக்கு முத்த மழை பொழிந்தார். அவன் வருங்காலம் வள்ளுவர் வகுத்த வழியில் அமையும் என எண்ணி மகிழ்ந்தார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியமாம் தமிழ்க் காவியத்திலிருந்து இக் கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப் படுகிறது.

# ஓராண்டில் அறநிலையத்துறையின் ஒப்பற்ற சாதனைகள்

அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி.கந்தசாமி எம்.ஏ., அவர்கள்

கேள்வி : அறநிலையத்துறை மேம்பாட்டிற்காக இது வரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

அமைச்சர் : தமிழகத்தில் மீண்டும் பொற்காலத்தை உருவாக்கும் வண்ணம் ஓராண்டிற்கு முன் 27.1.89 அன்று வள்ளுவர் கோட்டத்தில் தமிழக முதல்வராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

அவர்களுடையசீரிய தலைமையில்கடந்த ஓராண்டுக் காலத்தில் தமிழகம் கண்டிருக்கும் —கண்டு வரும் சாதனைகள் மகத்தானவை. சரித்திரம் மதிக்கத்தக்கவை.

அறநிலையத்துறை இவ்வோராண்டில் ஆற்றியுள்ள சாதனைகளும் ஒப்பற்றவையே. ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காண்போம்'' என்ற க்விதாகூரின் கருத்தின் அடிப்படையிலும், ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்ற வள்ளலாரின் சீரிய சிந்தனை அடிப்படையிலும் அறநிலையத்துறை செயல்படவேண்டும் என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழி. அதுவே நம் முதல்வர் கலைஞர் அவர்கள்நம்மை நடத்திச் செல்லும் வழியுமாகும்.

தமிழக மக்களுக்குப் பயன்படும் வகையில் தமிழக மக்கள் போற்றிடும் வகையில் அறநிலையத்துறையை மேம்படுத்த வழிகாண வேண்டும் என்ற உன்னத நோக்கில் 10-3-89 அன்று இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் சமயச் சான்றோர்களின் ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் கூட்டப்பட்டது.



இக்கூட்டத்திற்குத் தலைமையேற்ற முதல்வர் கலைஞர், கழக ஆட்சியில்தான் முதன் முதலாக அறநிலையத்துறைக்கென்றே தனி அமைச்சரும், தனி வரவு செலவுத்திட்டமும், சட்டப்பேரவையில் தனி விவாதமும் 1970-இல் உருவாக்கப்பட்ட விவரத்தை எடுத்துக் காட்டி 1967-லிருந்து 1976 முடிய அறநிலைத்துறை ஆற்றிய அரிய சாதனைகளையும் பட்டியலிட்டுக் காட்டினார்கள்.

அவைபோன்ற சாதனைகள் தொடர்ந்திட ''இந்து சமய அறநிலையத்துறை ஆக்கப்பணி ஆலோசனைக் குழுவை 10-3-89-இல் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

**அறநிலையத் துறையின் ஓராண்டுச் சாதனைகள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பேட்டி இங்கே எடுத்து வெளியிடப்படுகிறது.**

தவத்திரு குன்றக்குடி அடிகளார், முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார், திருவரங்கம் திருமலை ஐயங்கார், காஞ்சி மடத்தைச் சேர்ந்த புலவர் ஜெயசெந்தில் நாதன், காரைக்குடி அழகப்பாப் பல்கலை கழகத் துணைவேந்தர் திருமதி இராதா தியாகராஜன் ஆகிய ஐவரைக் கொண்ட ஆலோசனைக் குழு அறநிலைத்துறையை மேம்படுத்தும் அரிய ஆலோசனைகளை அரசிற்கு செப்டம்பர் திங்களில் வழங்கியுள்ளது. அவ்வறிக்கையையும் நன்கு ஆய்வு செய்து வருகிறோம்.

இதற்கிடையில் நம் கழக அரசு அமைந்த 101 நாளிலேயே கடந்த ஏழு ஆண்டுக் காலங்களாக ஓடாமல் இருந்த திருவாரூர் ஆழித் தேரை முற்றிலுமாகச் செப்பனிட்டு 7-5-89 இல் வெகு விமரிசையாக ஓடச் செய்த அரிய சாதனையும் நிகழ்த்தப்பட்டிருப்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி:-திருக்கோயில்கள் மூலம் செய்யப்படும் சமுதாயப்பணிகள் சிலவற்றைக் கூறுங்கள்.

அமைச்சர் :—கடந்த 1989-ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில நாட்களிலேயே பேரறிஞர் அண்ணா நினைவு நாள் வந்தது. பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் ஆலயங்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து வழங்க ஏற்பாடு செய்தோம்.

வழக்கம்போல் சுதந்திரத் திருநாளிலும் பொது விருந்து வழங்க ஆவனச் செய்து, வருடத்தில் இரண்டு முறை ஏழை எளிய மக்கள் பயன்படும் விதத்திலும், பேரறிஞர் அண்ணா வற்புறுத்திய ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற இலட்சியம் சாத்தியமாகும் வகையிலும் செயல்பட்டு வருகிறோம்.

சென்ற ஆண்டைப்போல் இவ்வாண்டிலும் 3-2-90 அன்று பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் பொது விருந்து, ஆலயங்களில் வழங்கப்பட்டு பல லட்சக்கணக்கானோர் பயன் அடைந்துள்ளார்கள்.

கேள்வி: திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யும் திட்டம் பற்றிக் கூறவும்.

அமைச்சர்: மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மூலம் மதுரை ஏழுகடலில் 90இலட்ச ரூபாய் செலவில் வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் திறப்பு விழா நடைபெற உள்ளது.

இத்தகைய பலநோக்கு அங்காடி மையங்கள் அமைப்பதோடு திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் வீட்டு வசதி அமைப்புக் குடியிருப்புகளையும் உருவாக்கி அவற்றின் மூலமும் ஆலயங்களுக்கு அதிகமாக வருவாயை ஈட்டித் தர திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

கேள்வி: திருக்கோயில்களின் ஆண்டு வருமானம் என்ன? வருமானத்தை உயர்த்தும் திட்டம் உண்டா?

அமைச்சர் :—தற்போது தமிழ்நாட்டில் அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் மொத்தம் 35.130 ஆலயங்களும் அறநிலையங்களும் இருந்து வருகின்றன. இவற்றில் ஆண்டு வருமானம் ரூ. 2,000-த்திற்கும் குறைவான ஆலயங்களே 26.559 ஆலயங்கள் இருந்து வருகின்றன.

1. ஆண்டு வருமானம் ரூ. 2,000-த்திற்கும்கீழ் உள்ளவை 26,559 ஆலயங்கள்.

2. ஆண்டு வருமானம் ரூ. 10,000-த்திற்கும் கீழ் 6464 ஆலயங்கள்.

3. ஆண்டு வருமானம் ரூ. 10000-50,000. 1585 ஆலயங்கள்.

4. ஆண்டு வருமானம் ரூ. 50000—1 லட்சம், 210 ஆலயங்கள்.


5. ஆண்டு வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மேல் 332 ஆலயங்கள்.

...

தற்போது சுமார் 40 கோடி ரூபாயாக இருக்கும் ஆலயங்களின் மொத்த ஆண்டு வருவாயை வரும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் சுமார் 100 கோடியாக உயர்த்த வேண்டும் என்பது எங்கள் திட்டம்.

அதற்காகச் சென்னை போன்ற பெரிய நகரங்களில் ஆலயங்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்களில், அங்காடி மையங்களை அமைத்து அதன் மூலம் ஆலயங்களின் வருவாயை உயர்த்த எண்ணியிருக்கிறோம்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடிய திருத்தலங்களுக்குத் திருப்பணிகளைத் தொடங்கி நிறைவேற்றும் சீரிய செயல் திட்டங்களையும் தற்போது வகுத்துச் செயல்படுத்தி வருகிறோம். முதற்கட்டமாகத் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 10 திருத்தலங்களும்



## திருக்குறளின் பெருமை

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு உருவாகியிருந்த தமிழ் நிலத்துச் சமுதாயச் சூழலின் நடுவிலே எழுத்தாணி பிடித்து ஏடெழுதிய வள்ளுவப் பெருந்தகையார் அறம் எதுவென அறுதியிட்டுக் கூறினார். இல்வாழ்க்கையின் இனிய பயனையும், எப்படி இருந்தால்துறவறம் சிறப்புடையது என்பதையும், வாழ்க்கையில் கொள்ளுவன தள்ளுவன எவை எவை எனப் பகுத்துக் காட்டியும், முடியரசு ஆட்சி நடந்த காலத்திற்குச் சொல்லப்பட்ட அறிவுரைகளைக் குடியரசு ஆட்சி நடக்கும் நாடுகளுக்கும் பொருந்துமெனக் கூறுமளவுக்கு அரசியல் கோட்பாடுகளை வகுத்தளித்தும், உயிர் இனத்தின் இயற்கை உணர்வான காமஉணர்வு ஆறாவது அறிவையும் பெற்றுள்ள மனித இனத்தினையும் ஆட்படுத்தக் கூடிய ஆற்றல் கொண்டது எனினும் அதற்கு அன்பினைஅடிப் படையாகக் கொண்ட இலக்கண இலக்கியக் கவசம் அணிவித்தும், எப்பாலினும் சிறந்த முப்பாலினைப் பொழிந்து அதில் தேன் தமிழும் கலந்து நம் இதயத்தின் வாயிதழ் திறந்து ஊட்டுகின்ற அமிழ்தமே திருக்குறள்.

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்

அவற்றின் திருப்பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை விவரமும் பின்வருமாறு:—

| வ.எ. | | ஆலயத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (லட்சத்தில்) | 1989-90இல் ஒதுக்கப்பட் டுள்ள தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு | ஏகாம்பரேஸ்வரர் ஆலயம் காஞ்சிபுரம், | 60 | 10 |
| 2. | ,, | வீரட்டேசுவரர் ஆலயம், திருவதிகை | 10 | 7 |
| 3. | ,, | பிரம்மபுரீஸ்வரர் மற்றும் சட்டநாதர் ஆலயம், சீர்காழி | 40 | 9 |
| 4. | ,, | ராஜகோபாலசாமி ஆலயம், மன்னார்குடி | 20 | 9 |
| 5. | ,, | நீலயதாட்சியம்மன் ஆலயம், நாகபட்டினம் | 10 | 6.15 |
| 6. | ,, | வேதாரண்யேசுவரர் ஆலயம் வேதாரண்யம் | 30 | 12.50 |
| 7. | ,, | ஆத்மநாதசாமி ஆலயம், ஆவுடையார் கோயில் | 35 | 7 |
| 8. | ,, | நாச்சியார் ஆலயம், ஸ்ரீவில்லிபுத்தூர் | 70 | 12 |
| 9. | ,, | சோமநாதசுவாமி ஆலயம், பழையாறை | 30 | 5 |
| 10. | ,, | திருச்சோபுரநாதீஸ்வரர் ஆலயம், திருச்சோபுரம் | 30 | 5 |

# காலத்தேரில் பார்த்தசாரதி ஆலயம்

பேராசிரியர் தேவ. நடராஜன்

காலம் எனும் தேரில் அமர்ந்து பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு அருள்மிகு பார்த்தசாரதி கோயில் அமையப் பெற்ற நிகழ்ச்சியினையும், பின்னர் பற்பலநூற்றாண்டுகளில் அத்திருக்கோயில் பெற்ற பெரு வளர்ச்சியினையும் காணலாகும். சமய வளர்ச்சியுடன் சமூக - பொருளாதார வளர்ச்சியின் நிலைக்களனாகவும் திருக்கோயில் நின்று மக்களின் நல்வாழ்வினை மலரச் செய்திருக்கின்றது. திருக்கோயிலைச் சுற்றியே ஊரும், பின்னர் நகரும் பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உருவாகியிருக்கின்றன. சென்னை மாநகரின் வரலாறு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்குள் அடங்குவதாகும். ஆனால் முதலாழ்வார்களின் காலமான கி.பி. ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளிலேயே திருக்கோயிலைச் சுற்றி, திருக்குளத்தின்பெயரையே தானும் பெற்று 'திருவல்லிக்கேணி' எனும் அழகிய ஊர் அமைந்துவிட்டது. திருமங்கை மன்னன் வாழ்ந்த பல்லவர் காலமான எட்டாம் நூற்றாண்டில், அது மேலும் வளர்ந்து, 'திருநகராகவே' திகழ்ந்தது. பின்னர் விஜயநகர பேரரசர்களின் காலத்தில் அது வைணவம் வளர்க்கும் பெருஞ் செல்வ நகராகப் பொலிந்தது. கிழக்கிந்திய கம்பெனியாரின் காலத்திலும் அதன் முக்கியத்துவம் குறையாது முனைந்தே நின்றது. இன்றும் திருவல்லிக்கேணி, பாரதத்தின் தலைசிறந்த வைணவத் தலங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.


திருக்கோயிலின் தல வரலாற்றினைப் பிரம்மாண்ட புராணம் தெரிவிக்கின்றது. இது நம்மை ஏறத்தாழ ஐயாயிரம் (5000) ஆண்டுகளுக்குமுன்பு அழைத்துச் செல்கின்றது. அது வேதவ்யாசர் வாழ்ந்த காலம், வியாசரின் சீடர் ஆத்திரேயர், குருவை வணங்கி நிற்கின்றார். ''ஆத்திரேயரே! இனி நீ பிருந்தாரணியம் சென்று, பரமபதம்பெறுக' என்கின்றார் வியாசர். கீதாசாரியகோலத்தில் நிற்கும் கண்ணனின் திருவுருவம் ஒன்றினையும் தருகின்றார். இன்றைய சென்னை மாநகரின் திருவல்லிகேணிப் பகுதியே, அப்பொழுது, பெரிய துளசிக்காடாக விளங்கியது. பிருந்த (துளசி) ஆரணியம் (காடு). அங்கே ஆத்திரேயர் சுமதி என்ற முனிவரைக் கண்டு 'கைரவிணி' (திருவல்லிக்கேணி) குளக்கரையில் கண்ணனைப் பிரதிட்டை செய்து போற்றினார், கண்ணனின் அருகில் தேவி ருக்மணியும் அழகிய திருஉருவில் அமைந்தாள், கண்ணனின் உடன்பிறப்பான பலராமர், சாத்தியகி, மகன் பிரத்தியும்னன், பேரன் அநிருத்தன் ஆகியோரும் அருகிலேயே திருவுருக்களில் அமைந்தனர். கண்ணன் தனது குடும்பத்தாருடன் இவ்வாறு திருக்காட்சி தருதல் வேறு எங்கும் காணக்கிடைக்காத ஒன்றாகும். கம்பீரமானத் தோற்றம், பெரிய மீசை, ஒருகையில் பாஞ்ச சன்யம்' (சங்கு) ஆனால் மற்றொரு கையில் சக்கரம் இல்லை, அந்தக் கைதான முத்திரையாய் திருவடியைக் காட்டும்; ஆகையால் இங்கு வெறும் அழிவுக்கு வேலையில்லை. அன்பும், அடைக்கலமும், பயன் கருதாப் பணியுமே இங்கு போற்றப்படுகின்றன.

வடவேங்கடவனை வழிபடும்பொழுது, சுமதி என்ற மன்னன் ஒருவன் பெருமாளைக் கீதை வழங்கும் கண்ணனாகக் காண விழைந்தான், திருமலைத் திருவேங்கடவர், ''கீதாசாரியக் கண்ணனை திருவல்லிக்கேணியில் காண்க'' எனத் திருக்குறிப்புத் தந்தார். பார்த்தசாரதிக்குத் தனிக் கோயில் பாரதத்தில் வேறு எங்கும் இல்லை. வேங்கடவரே ''திருவல்லிக்கேணியில் காண்க'' என வழிகாட்டியதால், திருவல்லிக்கேணிக் கண்ணன், 'வேங்கட கிருட்டிணன் என்ற திருப்பெயர் பெற்றார்.

மூலவர் வேங்கடகிருட்டிணன்; பஞ்சலோக உற்சவ மூர்த்தமே 'பார்த்தசாரதி'. உற்சவரின் முகத்தில் கரிய தழும்புகள் காணப்படுகின்றன. அவை பாரதப்போரில் பீஷ்மரின் அம்புகளைக் கண்ணன் திருமுகத்தில் அன்புடன் தாங்கியதை நினைவு கூறும். அம்பினால் தாக்கினாலும், அன்பர்க்கு அன்பு செய்யும் மோகனப் புன்னகையை முகம் காட்டும், பார்க்கத் தெவிட்டாப் பேரருட் காட்சி.


ஐந்து-ஆறாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த முதலாழ்வார்களுள் இருவர், பேயாழ்வாரும் திருமழிசையாழ்வாரும் ஆவர். பேயாழ்வார் மயிலையில் பிறந்தவர். ஆனால் அவர் திருவல்லிக்கேணிக் கோயில் அருகிலேயே குடியேறிவிட்டார். அவருடைய சீடரே திருமழிசையாழ்வார். பார்த்தசாரதியைப் போற்றும் அவர்தம் பாசுரங்கள் அக்காலத் திருவல்லிக்கேணியை அழகுறக் காட்டுகின்றன.

திருக்கோயில் பற்றிய தெளிவானக் காட்சிகள் எட்டாம் நூற்றாண்டில் திருமங்கைமன்னனின்



பேராசிரியர் தேவ. நடராஜன்

(எம்.ஏ., மானிடவியல் டிப்ளமா, ஃபோர்டு நிறுவன ஆராய்ச்சிப் பயிற்சி (சென்னை) எப்.ஆர்.இ.எஸ்.(இலண்டன்) (புவியியல் டிப்ளமா) பிரெஞ்சு சர்டிபிகேட்) (எம்.ஏ.க்கு மேலான பல்கலைக் கழக பொருளியல் டிப்ளமா) (நூலகவியல் சர்டிபிகேட்)



**ஸ்ரீ வேங்கடகிருட்டிணர்**

திருப்பாசுரங்களிலிருந்து கிடைக்கின்றன. தேன் நனைந்த குளிர்ந்த சோலைகளையும், நீர்நிலைகளையும், நீண்ட மதிற்சுவர்களையும், மாட மாளிகைகளையும் மண்டபங்களையும் காண்கின்றோம். எல்லாம் தென்னன் தொண்டையர்கோன் செய்த திருப்பணிகள். அழகிய மங்கையருக்கும் அங்குக் குறைவில்லை. அரங்கநாதரும், இராமரும், தெள்ளியசிங்கரும் (யோக நரசிம்மர்) வரதராஜரும் கோயிலில் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர். கோயிலில் காணப்படும் பல்லவர்காலக் கல்வெட்டுக்களிலிருந்து திருமங்கை மன்னன்பாடிய தொண்டையர்கோன், பல்லவ மன்னன் நந்திவர்மன் பல்லவ மன்னனாகவோ (கி.பி. 731-795) அல்லது அவர் மகன் தந்திவர்மனாகவோ இருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. இம்மன்னர் இருவரும் திருமங்கை மன்னன் காலத்தவரே.

பதினோராம் நூற்றாண்டினைச் சேர்ந்த வைணவ ஆசாரியார் ஸ்ரீஇராமானுசரின் பிறப்பிற்கும் பார்த்த சாரதி கோயிலுக்கும் நெருங்கியத் தொடர்பு இருந்திருக்கின்றது. இராமனுஜரின் தந்தை பிள்ளைப்பேறில்லாமல் வருந்த, திருக்கச்சி நம்பி, ''திருவல்லிக்கேணி திருக்குளத்தில் நீராடி, பார்த்தசாரதியைப் பணிமின்'' என அறிவுறுத்தினார். அவ்வாறே, ''திருவல்லிக்கேணி நின்றான்'' திருவருளால் வைணவ உலகிற்கு ஒரு வரப்பிரசாதமாக இராமானுஜர் பிறந்தார். ஸ்ரீஇராமனுஜரும் ஸ்ரீஆளவந்தாரும் இக்கோயிலில் வழிபாடு செய்ததாகவும் கருதப்படுகின்றது. திருக்கச்சி நம்பியோ சிறு வயது முதலே பார்த்தசாரதியைப் போற்றி வழிபடும் பேறுடையவராய் இருந்தார்.

சோழ, பாண்டியப் பேரரசர்களின் ஆதிக்கத்தையும், திருவல்லிக்கேணிப் பகுதி கண்டிருக்கிறது. கோயிலில் காணப்படும் சோழ, பாண்டியர்களின் கல்வெட்டுக்களில் சோழப் பேரரசன் இராஜராஜன் (கி.பி. 985-1014) மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178 - 1216), இரண்டாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1251-1267), முதல் மாறவர்மன் குலசேகரன் (கி. பி. 1260-1310), முதலானோர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

விஜயநகரப் பேரரசர்கள் காலத்தில் பார்த்தசாரதி கோயிற் திருப்பணிகள் பெரிய அளவில் நிகழ்ந்திருக்கின்றன. கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் சதாசிவன் (கி.பி. 1542-1576), முதல் ஸ்ரீரங்கன் (கி.பி.1572-1585), இரண்டாம் வெங்கட்டா (கி.பி. 1586-1614) முதலிய விஜய நகரப் பேரரசர்களைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்களுள் இரண்டாம் வெங்கட்டாவின் தளபதி திருமலா நாயனகாரு, செம்பியம், நெடும்பாறை என்ற இரண்டு கிராமங்களைத் திருக்கோயிலுக்குத் தானமாகத் தந்தார் எனத் தெரிவிக்கின்றது ஒருகல்வெட்டு. மற்றொரு கல்வெட்டு மிகச் சிறப்பான ஒரு செய்தியை மொழிகின்றது. அது விஜயநகர பேரரசர் இரண்டாம் வெங்கட்டாவின் மாமனாரே பார்த்தசாரதி கோயிலின் ''ஸ்ரீ காரியம் பார்ப்பவராக'' நியமனம் பெற்றிருந்தார் என்பதாகும். என்னே பார்த்த சாரதி கோயில் பெற்றிருந்த பேரும் புகழும் பெரு முக்கியத்துவமும்! திருக்கோயிலுக்கு மன்னர்களும் தளபதிகளும் மட்டுமல்லாமல் பொதுமக்களும் திருப்பணிகள் புரிந்துள்ளனர். கல்வெட்டுக்கள் இவைபற்றி விரிவாகக் கூறுகின்றன. அரசர் சதாசிவன் (கி.பி. 1542-1576) காலத்தில் அன்பர் ஒருவர் அரங்கநாதரின் திருச்சந்நிதிக்குத்திருப்பணி செய்தார். அவரே வேதவல்லி நாச்சியார் திருச்சந்நிதி, திருவாய்மொழி மண்டபம்; திருமடப் பள்ளி திருமதில் முதலியவற்றையும் அமைத்து, வேதவல்லி நாச்சியாரின் உற்சவ திருவுருவினையும் வழங்கினார். மேலும் விஜயநகர பேரரசர் காலத்தில்தான் திருமழிசை ஆழ்வார், ஸ்ரீஇராமானுஜர் இவர்தம் உருவங்கள் திருக்கோயிலில் அமைக்கப் பெற்றன. இதுவன்றித் திருக்குளத்திற்கு எதிரே உள்ளதும் கல்லால் ஆன வளையங்கள் கொண்டதுமான நாற்கால் மண்டபமும், திருக்குளத்திற்கு அருகில் உள்ள அனுமனின் திருச்சந்நிதியும் பிற்கால விஜயநகரபாணியில் அமைந்தனவாகவே தெரிகின்றன.

அண்மைக் காலங்களில், பார்த்தசாரதி திருக்கோயில் மேலும் பலவளர்ச்சிகளைப் பெற்றிருக்கக் காண்கின்றோம். கோயிலின் கிழக்கு வாயிலுக்கு முன்புள்ள முப்பத்தாறுகால் மண்டபமும், மேற்கு வாயிலில் தெள்ளிய சிங்கர் சந்நிதிக்கு முன்புள்ள கோபுரமும் அண்மைக் காலங்களில் அமைந்தனவே. 1803-ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கோயிலின் திருமடப்பள்ளியைப் பொன்னேரி வட்டத்தினைச் சேர்ந்த ஒரு ஊரினர் கட்டியதாகக் கூறுகின்றது. அதே ஊரினைச் சேர்ந்த கனகவல்லி அம்மாள் என்பவர், வேதவல்லி நாச்சியார் திருச்சந்நிதியினைக் கட்டியதாகவும் வேறொரு கல்வெட்டு விளம்புகின்றது.

இசைப் பேரரசர்களான தியாகராஜரும், முத்துசாமி தீட்சிதரும், பாரதத்தின் பெருமையினை உலகிற்குப் பறை சாற்றிய சுவாமி விவேகானந்தரும் பார்த்தசாரதி கோயிலுக்கு வருகை தந்து வழிபட்டுள்ளனர்.


மறையவன் வேடத்திலிருக்கும் அர்ச்சுனனுக்கு வெற்றி மாலை சூட்டுகிறாள் திரௌபதி.
திரௌபதியுடன் மறையவர்கள் புறப்பட அவர்களைப் பாண்டவர்களோ என ஐயப்பட்டுப் பின் தொடர்கிறான் திட்டத்துய்மன்.
சித்திர பாரதம்
கதை வடிவம் செவ்வேள்
படம் M.N ராஜா
அம்மா கனி ஒன்று கொண்டுவந்தோம்
ஐவரும் சமமாகப் பகிர்ந்து உண்ணுங்கள்.
திரௌபதியைக் கண்டு வியப்புறும் குந்தி, "ஆ! இப்படிக் கூறிவிட்டேனே" என்று வருந்துகிறாள்.
அப்போது அங்குத் தோன்றிடும் வியாச முனிவர், "வருந்தாதீர்! உங்கள் வாக்கு பொய்க்காது" என்று தேற்றுகிறார்.
மறையவர்களைப் பாண்டவர்களே எனத் தெளியும் துருபதன், அவர்களை வரவேற்று உபசரிக்கிறான்
அர்ச்சுனன் திரௌபதி திருமணத்தை உடனே நடத்தி விடுவோம்
"பாண்டவர்கள் ஐவருமே திரௌபதியை மணப்பார்கள்" என்று கூறும் வியாசர் அதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகிறார்.
முன் பிறவியில் இத்திரௌபதி கற்புக்கரசி நளாயினியாகப் பிறந்திருந்தாள். மௌத்கல்ய முனிவன் இவள் கணவன்
நளாயினியின் கற்பைச் சோதிக்க விரும்பிய மௌத்கல்யன குட்டநோயாளியானான் அழுகிடும் கையால் அவன் உண்ட அன்னத்தின் மிச்சிலைச் சிறிதும் அருவருப்பின்றி உண்டாள் இவள்.


புண்ணிய தீர்த்தங்களில் நீராட விரும்பிய தன் கணவனைக் கூடையில் வைத்துத் தூக்கிச் சென்று தீர்த்தமாடச் செய்தாள்.
இருளில் ஒரு சோலையின் வழியாகச் சென்ற போது மாண்டவரிசியை இவள் கூடை இடித்துவிட்டது.
ஏ! பெண்ணே! விடிந்தால் நீ உன் கணவனை இழப்பாய்.
நான் என் கணவன் பணியில் குறை வைக்காத பத்தினி என்பது உண்மையானால் ஆதவனே நீ உதிக்காதே!
நளாயினியின் சாபத்தால் கதிரவன் தோன்றவில்லை
தேவர்களுடன் வந்த மாண்டவரிசி,
தாயே! உன் கற்பின் மேன்மை அறியாமல் நானே தவறு செய்துவிட்டேன். என் சாபத்தை நான் திரும்பப் பெற்றுக் கொண்டேன். பாருக்கு ஒளி கூட்டும் சூரியனைத் தோன்றச் செய்
நளாயினியின் கற்பின் திண்மை கண்ட மௌத்கலியனும் மன்மதனை வெல்லும் வடிவம் கொண்டான்
என்ன வரம் வேண்டுமோ கேள்
இம்மை மறுமைகளில் நீங்களே என் கணவராக இருந்து சுகமளிக்க வேண்டும்
இவ்வாறு ஐந்து முறை அன்று நளாயினி வேண்டினாள். ஆகவே தான் பாண்டவர்கள் ஐவரை இப்பிறவியில் மணக்கிறாள்
பாண்டவர்களுடன் திரௌபதியின் திருமணம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது பாஞ்சாலத்தில் இன்புற்றிருக்கும் பாண்டவர்களை அத்தினாபுரிக்கு வந்து சேருமாறு அழைப்பு விடுக்கிறான் திருதராட்டிரன்.

# சிங்கவர்மன் கண்ட சிதம்பர தரிசனம்!

## 'நடராசன் அடிமை'

உடலில் ஊனமுள்ளவர், நோயுள்ளவர் அரசராக இருக்கக் கூடாது என்பது பழைய வழக்கு. திருதராஷ்டிர மன்னன் கண் பார்வையற்றிருந்ததால் தனது தம்பியான பாண்டுவிற்கு அரசையளித்தான் என்பது பாரதம் கூறும் வரலாறு.

கௌட தேச மன்னவனான சிங்கவர்மன் என்பவன் உடல் பூராவும் வெண்குட்ட நோய் பரவியிருந்ததால் அரசைக் கைக் கொள்ளாது தன் தந்தையிடம் விடை பெற்றுத் தன் நோய் நீங்க வேண்டுமென்ற எண்ணத்தில் பல தலங்களை தரிசித்துக் கொண்டு வரும்போது தில்லை வனமடைந்தான். ஒரு வேடன் வழி காட்ட வியாக்ரபாதர் தவஞ் செய்யுமிடத்தையடைந்து "இவரது மரவுரி நனைந்துள்ளது. கூடையிலுள்ள மலர்கள் வாடாது புதியவைகளாய் உள்ளன. ஆதலால் இவர் சமாதி நிலையிலோ, தவத்திலோ இல்லை. தியானஞ் செய்து கொண்டிருக்கிறார். கண் விழித்தவுடன் இவரைக காண்போம்" எனக் காத்திருந்தான். வியாக்ரபாதர் தியானம் கலைந்து எழுந்து கண் விழித்ததும் சிங்கவர்மனை யார் எனத் தன் ஞானக் கண்ணால் அறிந்தார். அவனது நிலைமை கண்டறிந்து இரங்கிய அத்தவச் செல்வர் சிங்கவர்மனின் வரலாற்றை நடராசப் பெருமானிடம் கூறி அவனுக்கு அருள் புரியுமாறு வேண்டினார். இறைவன் "அவ்வரசனைச் சிவ கங்கையில் நீராடச் செய்து நம் முன்னர் அழைத்து வருக" என்றார்.

சிங்கவர்மன் சிவகங்கையில் நீராடியவுடன் உடல் நோய் நீங்கப் பெற்று ஒளி மிகுந்த உடலுடன் விளங்க இரணியவர்மன் என அழைக்கப் பெற்றான். "இறைவனே! உன் தரிசனத்தால் பெரும் புண்ணியம் பெற்றேன். ஒரு தவசிக்கு நிகராக்கி விட்டாய். அடியேன் என்றும் உமக்கு அடிமையாகவே இருக்க வேணும்" என வரங் கேட்டான். இறைவனும் "எமக்கு வேண்டிய சேவை செய்து கொண்டு இன்புற்று வாழ்வாய்" என வரமளித்தனர்.

வியாக்ரபாதர் இரண்ய வர்மனை திருமூலநாதரின் சன்னிதியை தரிசிக்கச் செய்து, தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று தன் மனைவியிடம் "உபமன்யுவிற்கு அடுத்தபடியாக இறைவன் நமக்கு அளித்துள்ள இரண்டாவது மகன் இந்த இரணியவர்மன்" என்று கூற அவ்வம்மையும் அவ்வாறே ஏற்று அருள் புரிந்தாள்.

வியாக்ரபாதர் இரண்யவர்மனுக்குத் தான் இறைவனருளால் புலிக்கால் பெற்று வியாக்ரபாதர் என்ற பட்டம் பெற்றது, இறைவன் தன மகனான உபமன்யுவிற்குப் பாற் கடலை அழைத்து அளித்தது, ஆதிசேடனைப் பதஞ்சலி முனிவனாக்கி ஆட்கொண்ட வரலாறுகளை விவரமாகக் கூறினார்.

இரணியவர்மனின் தந்தை இறந்தார். ஆதலால் அவ்வரசை ஏற்குமாறு மந்திரிகள் முதலானவரோடு வசிட்டர் தில்லை வந்து நோய் நீங்கி ஒளியுடன் விளங்கும் அவனை அரசை ஏற்குமாறு அழைத்தனர். தன் தந்தையின் மறைவு கேட்டு வருந்திய இரணியவர்மனை வசிட்டர் தேற்றினார். அரசை ஏற்குமாறு அழைத்தபோது "இறைவனுக்கும் அடியாருக்கும் சேவை செய்வது தான் பெரும் பேறு. பெரியோர்கள் "கொள்ளேன் புரந்தரன் அயன் மால் வாழ்வு" எனப் பதவிகளை வெறுத்து 'செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்' எனப் பக்தியையே பெரும் செல்வமாகக் கூறியுள்ளனர். எனவே அரசுவேண்டாம். இங்கேயே இருக்கிறேன்" எனக் கூறி அரசை ஏற்க மறுத்தான் இரணியவர்மன்.


வியாக்ரபாதர் "அரசே! கௌட தேசம் சென்று அரசை ஏற்றுக் கொண்டு, பின் கங்கைக் கரைசென்று அங்கு பிரமன்செய்த யாகத்திற்காகச் சென்றுள்ள தில்லை வாழந்தணர்களான மூவாயிரவரையும் அழைத்துக் கொண்டு தில்லைக்குத் திரும்பி வந்து இங்கேயே இரு" என்றார்.

வியாக்ரபாதரின் கட்டளைக்கு இணங்கிய இரணியவர்மன் வசிட்டருடன் கௌடதேயம் சென்றான். செல்லும் வழியில் வியாக்ரபாதர் தன்னை மகன் போல் ஏற்றுக் கொண்டது, இறைவனான தில்லை நாயகன் தனக்கு நோய் நீக்கம் செய்தருளிய கருணை நிறைந்த வரலாறுகளை வசிட்டரிடம் கூறிக் கொண்டே சென்றான்.

கௌட தேசம் சென்று அரசை ஏற்றுக் கொண்ட இரணியவர்மன் "அனைவரும் தில்லை சென்று நடராசப் பெருமானின் தரிசனம் செய்து கொண்டு அங்கேயேஇருக்கலாம்வாருங்கள்" எனத் தன் உற்றார் உறவினர்களை அழைத்துக்கொண்டு கங்கைக் கரையிலுள்ள அந்தர் வேதி சென்று, பிரமனதுயாகத்திற்காக அங்குச் சென்றிருந்த தில்லை மூவாயிரவர்களை தில்லைக்கு வருமாறு அழைத்தான். அரசன் கொண்டு வந்த மூவாயிரம் தேர்களில் மூவாயிரம் பேரும் ஏறிக் கொண்டு தில்லை வந்து சேர்ந்தனர். "வியாக்ரபாதரே! உங்கள் கருணையால் இங்கு திரும்பி வந்து சேர்ந்தோம். இனி எக்காலத்தும் தில்லையை விட்டு பிரியாதிருக்க வேணும்" என்றனர்.

இரணியவர்மன் தில்லையின் வட மேற்கு மூலையில் மூவாயிரவர்களின் தேர்களை நிறுத்தி வியாக்ரபாதரிடம் மூவாயிரவரையும் எண்ணிக் காட்டும்போது ஒருவர் குறைவது கண்டு பிடித்தான். அப்போது தில்லை நாயகனான நடராஜ மூர்த்தி "தில்லை மூவாயிரவர்கள் எம்மை ஒப்பாவார். நாமும் அவர்களுக்கு ஒப்பாவோம். நாமும் அவர்களில் ஒருவர்" என அசரீரியாகக் கூறினார்.

"செம்மைமெய்ப் பெரியோர் போலத்
தேடரிதென்று மைந்தன்
மெய்ம்மையின் துயரம் நோக்கி விமலன் விண்ண
வரும் கேட்ப
"எம்மையொப்பவர்கள் யாரும். யாம் அவர்க்கு
ஒப்பாவோம் என்றே
அம்மையப்பனுமாவான் "நாமவர்களில் ஒருவன்"
என்றான்"



தில்லை வாழந்தணர்களில் நடராஜ மூர்த்தியும் ஒருவர். திருத் தொண்டத் தொகை பாடத் தொடங்கிய சுந்தர மூர்த்தி நாயனாருக்குத் திருவாரூர் தியாகராசப் பெருமானே ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என அடியெடுத்துக் கொடுத்தார் என்றால் இப்பெருமக்களின் பெருமையை எவ்வாறு கூறுவது.

திருத் தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமான் முதல்சருக்கத்திற்கே 'தில்லை வாழந்தணர் சருக்கம்' எனப் பெயரிட்டு ''நானும் அவர்களில் ஒருவன்'' எனத் தில்லை நாயகன் கூறிய செய்தியை

''இன்றவர் பெருமையெம்மால் இயம்பலாம் எல்லைத்தாமோ?
தென்தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத் தொகை முன்பாட
என்று வன்றொண்டர்தம்மை அருளிய ஆரூர் அண்ணல்
முன் திரு வாக்கால் கோத்த முதற் பொருளாரானார் என்றால்''

எனத் தில்லை வாழ் அந்தணர்கள் நடராசப் பெருமானின் திருவுருவமே என்பதைச் சேக்கிழார்பெருமான் கூறுவதைக் காணலாம். திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் தில்லை மூவாயிரவரும் சிவ கணநாதராகத் தோன்றக் கண்டு அவ்வழகிய காட்சியை திரு நீலகண்ட யாழ்ப்பாணருக்கும் காட்டியருளினார் என்பது வரலாறு.

சிவநேசச் செல்வர்களான பெரியோர்கள் இன்றும் தில்லை வாழ் அந்தணரை நடராசப் பெருமானின் நேர் பிரதிநிதியாகவும், அவர்கள் குலப் பெண்டிரை உலகமாதவான சிவகாமவல்லி அம்மையாகவும் எண்ணி வணங்குவர். தில்லை வாழ் அந்தணர் வீட்டுச் சிறு குழந்தையின் கரத்தால் திருநீறு பெற்று அணிந்தால் கூட அது நடராசாவின் பிரசாதம் என்பது பக்தர்களின் நம்பிக்கை. எமக்கே சொந்த அனுபவம்.


தில்லை வாழ் அந்தணர்களின ஆசியும் அன்பும் ஆதரவும் திருநீற்றுப் பிரசாதமும் பெற்று உலகமும் இவர்களை வணங்கி மேன்மை பெற்று விளங்க நடராசப் பெருமானின் அருளை வேண்டுகின்றோம்.

பின்னர் கொற்றவன் குடி எனற இடத்தில் இரணியவர்மன் தங்கி நடராசப் பெருமானுக்குப் பல வகையான திருவிழாக்கள் நடத்த ஏற்பாடுகள் செய்து வியாக்ரபாதர் பதஞ்சலி முனிவர்களுடன் வெகு காலம் தெய்வீகமான இன்ப வாழ்வு வாழ்ந்து நடராசப் பெருமானின் குஞ்சிதபதம் அடைந்தான்.

மழை வழங்குக ! மன்னவன் ஓங்குக!
பிழையில் பல்வளன் எல்லாம் பிறங்குக!
தழைக அஞ்செழுத்தோசை! தரை எலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

—திருச்சிற்றம்பலம்

# சீர்காழி முத்துத்தாண்டவர்



**இலக்கியப் பேரறிஞர் மு. அருணாசலம்**

தமிழ் நாட்டில் இன்றைய கீர்த்தனம்—கிருதி மரபுக்குப் பிரபிதாமகர் என்று சொல்லத் தக்கவர் சீர்காழி முத்துத்தாண்டவர். சிதம்பரம் நடராசப் பெருமான்மீது அளவில்லாத கீர்த்தனங்களும் பதங்களும் பாடியவர். இவர் பாடல்களை இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை சங்கீத வித்வான்கள் தங்கள் கச்சேரிகளில் நிரம்பப் பாடிவந்தார்கள். அக்காலத்தில் இவருடைய பதங்கள் அபிநயத்துக்கு மிகவும் சிறப்புடையனவாகக் கருதப்பட்டன. அக்காலம் நாட்டியக் கச்சேரிகள் யாவும் இசை வேளாளர் மரபாரிடமே இருந்தன. ஆனால் சமீப காலத்தில் நாட்டியமெல்லாம் ஒரு வியாபாரத் தொழிலாக, பணம் திரட்டும் கருவியாக மாறி விட்ட பின்னர் இவருடைய பாடல்கள் அதிகம் இடம் பெறுவதில்லை. நகர வாழ்க்கைக்குரிய ஆடம்பரங்களில் நாட்டியமும் ஒன்று என மாறிவிட்ட பின்னர், இவருடைய பாவம் பொருந்திய பாடல்களுக்கு இடம் குறைந்து விட்டது. இருப்பினும் சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்னர் ஜயம்மாள் பாட பாலசரசுவதி அபிநயம் பிடிக்க, இவருடைய 'தெருவில் வாரானோ' (கமாஸ்) என்பது போன்ற பாடல்களிலும் அவற்றின் ஆடல்களிலும் ஈடுபட்டு நெஞ்சைப் பறி கொடுக்காதவர் அரியர்.

முத்துத் தாண்டவர் சோழநாட்டில் சீர்காழி என்ற சிவதலத்தில் பிறந்தார். இத்தலம் சைவ சமய ஆசாரியராகிய திருஞானசம்பந்தர் அவதாரம் செய்து அம்பிகையிடம் ஞானப் பாலுண்ட அற்புதம் பொருந்தியது. இங்கு சுவாமி பெயர் திருத்தோணியப்பர். அம்பிகை திருநிலை நாயகி. யுகாந்த காலத்தில் பிரளயம் உண்டாகி அதில் உலகம் யாவையும் மூழ்கியபோது, சிவபெருமான் இங்கு ஒரு தோணியில் உயிர்களை ஏற்றி மிதக்கச் செய்து காத்தமையால் இத்தலம் தோணிபுரம் என்றும், சுவாமி தோணியப்பர் என்றும் பெயர் பெற்றதாக ஐதீகம். இத்தலத்தில் சுவாமி திருமுன் நாகசுரம் வாசித்தலாகிய வாச்சியத் தொண்டு செய்யும் (இன்று இசை வேளாளர் என்று சொல்லுகின்ற) குலத்தில், முத்துத் தாண்டவர் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் தாண்டவன் என்பது. இளமையில் இவர் தமிழ்க் கல்வி மட்டும் கற்று வந்தபோது கொடிய கன்ம வியாதியொன்றுஇவரைப் பிடித்தது. அதன் கொடுமையால் இவர் குலத்தொழிலாகிய நாகசுரம் வாசிக்கும் பயிற்சி பெற இயலாது போயிற்று. இருப்பினும், பரம்பரையாக வந்த சிவபக்தி முதிர்வால் இவர் நாள்தோறும் கோயிலுக்குச் சென்று, பிரமபுரமாகிய இத்தலத்துக்குரிய பிரமபுரீசரையும் திருநிலை நாயகியையும், திருத்தோணியப்பரையும மிக்க பக்தியோடு வழி பட்டு வந்தார். வழிபாட்டுக் காலம் தவிர மற்றை நேரங்களில் இவர் அந்நகரிலுள்ள ஓர் உருத்திர கணிகையின் வீட்டுக்குப் போய் அவளுடைய சிவநாம சங்கீர்த்தனத்திலும், ஆடலிலும், பாடலிலும் ஈடுபட்டு, சிவசிந்தையுடையராகவே இருந்து வந்தார். இவர் அவள் வீட்டிற்குச் சென்று ஆடலிலும் பாடல்லும் பொழுதைப் போக்குவதை குடும்பத்தார் கண்டித்தார்கள். இவர் கேட்கவில்லை. அதனால் குடும்பத்தில் மனக்கசப்பு. அவர்கள் இவரை வெறுத்து ஒதுக்கினார்கள். இவரும் முறைப்படி வீடு செல்வதும் உணவு கொளவதும் இல்லாமல் இருந்தார். பல நாள் கோயிலுக்குச் செல்வதும் நெடுநேரம் அங்கேயே தங்கி விடுவதுமாக இருந்தார்.


இப்படி ஒரு சமயம் மாலை நேரத்தில் சென்று கோயிலின் எல்லாச் சந்நிதிகளையும் தரிசித்து வந்த போது, இவருக்குப் பசி மிகுதி. ஆதலால் சோர்வு, அதனால் மிக்க தளர்ச்சியோடு, வாகனங்களை வைத்திருக்கும் இடம் சற்றே ஒதுக்குப் புறமானதால், அங்குச் சென்று சிறிது நேரம் படுத்தார். படுத்தவர் உறங்கி விட்டார். நேரம் ஆயிற்று. கோயில் சந்நிதியெல்லாம் திருக்காப்பிடும் சமயம் வந்தது. இவர் அங்கிருந்தது ஒருவருக்கும் தெரியாது. அர்ச்சகரும் காவல்காரரும் கதவுகளையெல்லாம் சாத்திப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

கொஞ்ச நேரமானபின் தாண்டவர் விழித்தார். எங்கும் இருண்டிருந்தது. வாகன அறை சும்மா சாத்தியிருந்தது. இவர் வெளியே வந்து பார்த்தால்எல்லாம்பூட்டப்பட்டிருந்தது. கோயிலை விட்டு வெளிப்பட்டுத் தம் வீட்டுக்குப் போக வழியில்லை. மனம் வருந்தித் தோணியப்பர் சந்நிதியை அடைந்தார். அங்கு நின்று பெருமாளைத் தம் உள்ளம் உருகத் தியானித்துத் தம் நிலையைக் குறிப்பிட்டுத் துதித்தார். இசை வேளாளர் மரபு ஆதலினால் தமக்கு இயல்பாய்த் தெரிந்திருந்த தேவாரப் பாசுரங்களையெல்லாம் பாடித் துதித்தார்.

அப்போது அவருடைய பூர்வ புண்ணிய வசத்தாலும், தமிழ்நாடு செய்த தவத்தாலும், ஒரு பேரற்புதம் நிகழ்ந்தது. சிவபெருமான் திருவுள்ளக் குறிப்பின்படி, உமாதேவியார் இவருடைய பசியையும் பிணியையும் ஒருங்கே போக்கத் திருவுள்ளம் கொண்டார். கோயில் பூசை செய்யும் பெரிய குருக்களுடைய பத்து வயதுப் பெண் குழந்தை போல் வடிவெடுத்து, அவர் முன் தோன்றினார். கோயிலுக்குள் குருக்களின் மகள் வந்தது இவருக்கு இயல்பாக இருந்ததேயன்றி, இவர் மனத்தில் எந்தச் சிந்தனையும் எழவில்லை.

பெண் குழந்தையான உமா தேவியார் கேட்டார்: ''அப்பா, நீ ஏன் இப்படி பெரிதும் வருந்துகின்றாய்''.

இவர் சொன்னார்; ''தாயே, நான் என்னவென்று சொல்வேன்? முற்பிறவியில் செய்த பாவத்தால் பெரிதும் துன்பப்படுகிறேன். என்னுடைய கன்ம வியாதி என்னைப் பெரிதும் வாட்டுகிறது. அதுவன்றியும் எப்போதும் வறுமை. இப்போது மிக்க பசி. நான் எதைச் சொல்லி உனக்கு உணர்த்துவேன்''? என்றார். பெண் குழந்தைகளைத் 'தாயே' என விளித்துப பேசுவது இன்றும் கூடப் பெரு வழக்கு.



''அப்பனே, நீ இப்போது மிகுந்த பசியோடிருப்பதால் சிறிது அன்னங் கொடுக்கிறேன். இதை உண்டு உன் பசி தணிவாயாக'' என்று சொல்லி உமாதேவியார் ஒரு கிண்ணத்தில் பிரசாத அன்னங் கொடுத்தார்.

தாண்டவர் அதை வாங்கியுண்டு பசி தீர்ந்தவராய் மிகுந்த நன்றி கலந்த மகிழ்ச்சியுடன் அப்பெண்ணைப் பார்த்துச் சொல்லுவார், ''தாயே, இந்தப் பசிப்பிணி இப்போது நீக்கியது போல, என் உடற்பிணீ நீக்கவும் ஏதேனும் நீ செய்வாய்'' என்று வேண்டினார். கேட்ட உமாதேவியார் ''அப்பா, உன் பெயர் தாண்டவனல்லவா? அதற்குப் பொருத்தமாகத் தில்லையில் தாண்டவமாடும் சபாநாதரை தரிசித்து அவர் மீது பாட்டுப் பாடினால் இந்த நோய் நீங்கிக் குணமடைவாய். இப்போது புறப்பட்டுச் சிதம்பரம் செல்'' என்றார்.

''தாயே, நான் அதிகம் கற்றவன் அல்லேன். எனக்குப் பாடத் தெரியாதே? நான் எவ்வாறு பாடுவேன்?'' என்று இவர் கண்ணீர் விட்டார்.

மீண்டும் அம்மையார், ''அது பற்றி நீ வருந்தாதே. சிதம்பரம் செல். கனகசபையில் நின்று நீ தரிசிக்கும்போது, அங்கு தரிசிக்கும் திருக்கூட்டத்தாரிடையில் என்ன சொல் பிறக்கிறதோ அச்சொல்லை வைத்தே பாடத்தொடங்கு. சபாநாயகர் கிருபையால் உனக்குப் பாட வரும்'' என்றார்.

இச்சொற்களைச் சொன்னவுடன் சிறுமியாக வந்திருந்த உமாதேவியார் ஒரு சோதியாக மறைந்துவிட்டார். பார்த்துக்கொண்டேயிருந்த தாண்டவர் மிக்க வியப்பும் துக்கமும் ஒருங்கே அடைந்தார். ''என் கண்முன்னே வந்து இவ்வளவு நேரம் உரையாடிய என் தாயை நான் குருக்கள் குமாரி என்று எண்ணிவிட்டேன், வந்தவர் மேலோக மாதாவாகிய உமாதேவி என்று என் அஞ்ஞானத்தினால் அறிந்து கொள்ள முடியாத பாவியானேன்! கதவுகளெல்லாம் பூட்டியபடி இருக்க இங்குச் சிறு பெண் எப்படி வர முடியும்? இதை நான சிந்திக்கவில்லையே'' என்றெல்லாம் சிறிது நேரம் பலவாறாகப் பிரலாபித்தார். பின்னர், ''என் பசிப்பிணி போக்கிய உமாதேவியார் நினைத்தால் ஒரு கணத்தில் என் உடற் பிணியையும் நீக்கியிருக்கலாமே, ஏன் என்னைச் சிதம்பரம் போகும்படி கட்டளை இட வேண்டும்? ஆயினும் இறைவியின் திருவுள்ளத்தை யார் அறிய முடியும்? எனவே, நான் அம்மையார் கட்டளைப்படி நடப்பேன்'' என்று துணிவு கொண்டு அதன் பின்னர் உறக்கம் கொள்ளாமல் அம்பிகை சந்நிதிக்கு வந்துஅங்கேயே தோத்திரம் செய்தபடி நின்று கொண்டிருந்தார்.

நேரம் ஆயிற்று, பொழுது புலர்ந்தது. கோயில் காவலர், அர்ச்சகர் முதலியோர் முறைப்படி திருக்காப்பு நீக்கி உள்ளே வந்தார்கள். அம்பிகை சந்நிதியை அடைந்தபோது அங்கே இவர் கையில் பொற்கிண்ணத்தோடு நின்றிருப்பதைக் கண்டார்கள். கண்டபோது அவர்கள் உள்ளத்தில் சந்தேகம் எதுவும் எழவில்லை. ஏதோ தெய்வச் செயல் நிகழ்ந்திருக்கிறது என்பது மட்டும் தெரிந்து கொண்டார்கள். அவரைச் சமீபத்தில் அழைத்து ''அப்பா, உன்னை எங்கும் தேடிக் கொண்டிருக்கிறார்களே, நீ எப்படி இங்கு வந்தாய்''? என்று வினவினார்கள். அவர் மிக்க பணிவோடு தாம் கோயிலுக்கு வந்ததையும் உறங்கியதையும், கோயில் திருக்காப்பு செய்ததையும் பசியால் வருந்தியபோது இறைவியே தமக்குக் குருக்கள் புதல்வி வடிவத்தில் வந்து அன்னமளித்ததையும், பசி நீங்கி கோயில் திறக்கும் நேரத்தைத் தாம் எதிர்நோக்கியிருந்ததையும் விளக்கமாகக் கூறினார். கேட்டவர்கள்

### நரகம் அடையாதிருக்க குழந்தைக்குத் தெய்வப் பெயர் இடுங்கள்

மானிட சாதியில் தோன்றிற்று ஓர் மலவூத்தையை
மானிட சாதியின் பேரிட்டால் மறுமைக்கில்லை
வானுடை மாதவா! கோவிந்தா! என்று அழைத்தக்கால்
நானுடை நாரணன் தம்அன்னை நரகம்புகாள்.

—பெரியாழ்வார்

பெரிதும் அதிசயித்தார்கள் என்பது சொல்ல வேண்டியதில்லை. அவர் கையில் இருந்த பொற் கிண்ணம் அவர் கூறிய செய்தி உண்மை என்று நம்பக் காரணமாயிற்று. அன்றியும் அவர் முகத்தில் முன்னில்லாத ஓர் அழகிய ஒளி முத்துப்போல விளங்கியதையும் அவர்கள் கண்டார்கள்.

''அப்பா, நீ இறைவியைத் தரிசித்து அவருடைய அருளைப் பெற்றவன். உன்னை இனி நாங்கள் வெறும் தாண்டவன் என்று சொல்லாமல் முத்துத் தாண்டவன் என்றே இனி அழைப்போம்'' என்று சொல்லி அவ்வாறே அழைக்கத் தொடங்கினார்கள்.

அப்பால், முத்துத் தாண்டவர் தம் இல்லம் அடைந்து, நிகழ்ந்தவற்றை வீட்டிலுள்ளவரிடம் சொல்லிவிட்டுத் தில்லையை நோக்கிப் புறப்பட்டார். தில்லை அங்கிருந்து 12 மைல் தூரம். இடையில் மிகவும் அகலமான கொள்ளிட நதி. நடந்தே செல்ல வேண்டிய காலம். மெல்ல நடந்து கொள்ளிடத்தையும் கடந்து, பண்டைக்காலத்து நந்தனாரைப்போல, தில்லைப் பதியின் எல்லையை அடைந்தார். அங்கேயே சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து பின் நகரினுள் நுழைந்தார். கோபுரங்களைக் கண்டவுடனே மீண்டும் பணிந்தெழுந்து நான்கு வீதிகளையும் வலம் வந்தார். தில்லை மூவாயிரவர் வாசம் செய்யும் இல்லங்களையெல்லாம் பார்த்து வணங்கிக் கொண்டே சென்று சிவகங்கையை அடைந்து அதில் முறைப்படி நீராடி, திருநீறணிந்து நித்தியானுட்டானங்களை முடித்துக் கொண்டு ஈர உடையோடு உட்சென்று, நடராசப் பெருமான் சந்நிதியில் கனகசபையின் முன் நின்று அட்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிந்தெழுந்து துதி செய்தார். பக்தி மிகுதியால் மனமுருகிப் புளகாங்கிதம் அடைந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, தேவார திருவாசகங்களைஅறிந்தவராதலினாலே அவற்றை மனத்தால் சொல்லிக் கொண்டு, தலைக்கு மேல் கூப்பிய கையினராய், பரவசப்பட்டு நின்றார். அவருடைய மனம், ''கூட்டத்தில் யாரேனும் உச்சரிக்கும் ஒரு சொல்லைக் கொண்டு பாடத் தொடங்குவாயாக'' என்று அம்பிகை தந்த உத்தரவை எண்ணிக் கொண்டேயிருந்தது.

அந்த நிலையில் நடராச மூர்த்தியின் திருவருளால் சந்நிதியில் வந்திருந்தவர்களுள் ஒருவர் 'பூலோக கைலாசகிரி சிதம்பரம்' என்ற ஒரு தொடரைச் சொன்னார். கேட்ட முத்துத் தாண்டவர் திருவருள் உந்த, அதையே பல்லவியாக வைத்துக் கொண்டு பவப்பிரியா ராகத்தில் ஜெம்பை தாளத்தில் விரிவான தமது முதல் கீர்த்தனத்தைப் பாடித் துதித்தார். அவர் மேளக்காரர் மரபாயினமையால் இராகமும் தாளமும்அவருக்கு இயல்பாகக் கைவந்திருந்தன. இந்தக் கீர்த்தனம் பல்லவியும் அநுபல்லவியும், மூன்று நீண்ட சரணங்களும் உடையது. தாண்டவருக்கு இயல்பாகச் சிறப்பான குரல் வளம் அமைந்திருந்தது.

பல்லவி

பூலோக கயிலாச கிரி சிதம்பரம் அல்லால்
புவனத்தில் வேறுமுண்டோ (பூலோக)

அநுபல்லவி

சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
சபைவாணர் ஆனந்தத் தாண்டவம் புரிவதால்
(பூலோக)

முத்துத் தாண்டவர் சிதம்பரத்துக்குப் புதியவர் ஆனமையால் சிதம்பரத்தைப் பற்றித் தாம கேட்டிருந்தவற்றையும், இப்போது நேரில் கண்ட செய்திகளான கோபுரம், மதில், தூண்கள், ஆயிரக்கால் மண்டபம், சிவகங்கை, பேரம்பலம், கொடிநிலை, அம்பிகைக்கோயில், விமானங்கள், வீதிகள், சத்திரங்கள் முதலிய சிறப்புக்களையும் சரணங்களில் விரிவாகப் பாடுகிறார்.

இவ்வாறு நெடுநேரம் கண்டோர் அதிசயிக்கும்படியாகப் பாடிக் கொண்டே இவர் நின்றபோது இவரது பக்திக்கும் பாடலுக்கும் சபாநாயகர் மிகவும் திருவுளம் உவந்தருளினார். அக்கணமே இவரைப் பீடித்திருந்த கொடு நோய் நீங்கிவிட்டது. அன்றியும் பெருமான், திருக்களிற்றுப்படி என்னும் பஞ்சாட்சரப்படியின் மேல் ஐந்து பொன் தோன்றச் செய்து, தினந்தோறும் அதை வந்து பெற்றுக் கொள்ளும்படி தாண்டவருக்கும் கட்டளையிட்டருளினார். தமக்கு நேரிட்டிருந்த கொடிய உடற்பிணி தீரும்படி கடாட்சித்தருளிய ஆனந்த நடராச மூர்த்தியின் திருவருளை எண்ணியெண்ணி இவர் விம்மிதம் அடைந்து பின் படியிலிருந்த பொன்னையும் எடுத்துக் கொண்டு மீண்டும் பல முறை அட்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிந்து தோத்திரம் செய்து சீர்காழிக்கு மீண்டார்.

—(அடுத்த இதழில் நிறைவுபெறும்).

# நினைப்பினால் கோயில் செய்த நின்றவூர்ப் பூசலார்

புலவர் சு. நாராயணசாமி, எம்.ஏ.,எம்.எட்.,

''உள்ளம் பெருங்கோயில்'' என்றார் திருமூலர். ''நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்''எம்பெருமான் என்கிறார் அப்பர் சுவாமிகள். ''அடியார் பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரனே'' என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். உள்ளத்தைக் கோயிலாக்கி உவந்தவர்களில் நாயன்மார் இருவர் பெரியபுராணத்தில் பெரிதும் பேசப்படுகின்றனர். ''மயிலையில் மறவாமையால் அமைத்த மனைக்கோயில் உள்ளிருத்தி அன்பு என்னும் அமுது அமைத்து '' அர்ச்சனை செய்தவர் வாயிலார் நாயனார். சென்னையை அடுத்த திருநின்றவூரில் மனத்தால் கோயில் கட்டி மாதேவன் அருள் பெற்றவர் பூசலார். அவர் மாண்பு சிறிது காண்போம்.

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' எனப் பெயர் பெற்றது. சாக்கிய நாயனார், திருக்குறிப்புத் தொண்டர், காடவர் கோமான், பூசலார் நாயனார் ஆகியோர் வாழ்ந்து அருள் பெற்றதுஇந்நாடு.இத்திருநாட்டில் சென்னையைஅடுத்த இவ்வூரில் அந்தணர் மரபில் அவதரித்தார பூசலார் நாயனார். வேதம் ஆகமம் கற்றுப் பலகலையிலும் சிறந்து வளர்ந்தார். ''செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே'' என்ற ஞானசம்பந்தப் பெருமான் மொழிப்படியே சிவபக்தியில் மேம்பட்டு விளங்கினார் பூசலார். சிவனிடத்து பக்தி, சிவனடியாரிடத்து அன்பு இரண்டையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தார். சிவனடியார்களுக்கு வேண்டுவன கொடுத்து அதனால் மகிழ்வுகொண்டார். அன்பு மீதூரப் பெற்ற பூசலார் சிவனுக்கு ஓர் ஆலயம் எடுக்க எண்ணினார்.

கோயில் கட்டுவதற்கு எத்துணைப் பொருள் தேவைப்படும்? ஏழை அந்தணராகிய பூசலாருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்ற ஆர்வம் மேலிட்டதேயன்றிப் பொருள் கிட்டவில்லை. என்ன செய்வார்? பொருள் இருந்தால் புறத்தே கோயில் கட்டலாம். பொருள் இல்லை. எனவே மனத்தினால் கோயில் கட்ட எண்ணினார். மனமே கோயிலாக உள்ளது என்னினும் புறத்தில் கோயில் கட்டுவது போலவே நினைவினாலேயே பொருள் திரட்டி, அர்த்த மண்டபம், மகா மண்டபம், மதிற் சுவர் முதலானவை எல்லாம் கட்ட ஆரம்பித்தார். தேவையான பொருட்கள், தச்சர் தம்மையும் மனத்தினால் தேடிப் பெற்றார். இரவும் பகலும் கண் விழித்துக் கட்டலுற்றார். சிற்ப வேலைகளுடன் கூடிய விமானங்கள், தூண்கள், சிகரம் முதலானவைகள் ஆகமத்தில் கூறிய வண்ணம் அளவாக அமைத்தார். கொடி மரம், கிணறு, சுதை வேலைகள், குளம் முதலாக கோவிலுக்கு வேண்டுவன அனைத்தும் தம் நினைவினால் கட்டி முடித்தார். தம் மனக் கோயிலில் சிவபெருமானை எழுந்தருளச் செய்ய எண்ணினார். அதற்கென நல்ல நாளாகப் பார்த்து குடமுழுக்குச் செய்ய நாள் நிச்சயம் செய்தார்.

மனத்தினால் கோயில் கட்டினார். அதை நிறைவு செய்தார். குடமுழுக்கு நாள் முடிவு செய்தார். இவை பற்றி உலகத்தார்க்கு ஒன்றும் தெரியாது. ஏன் அவர் சிவனை நினைந்து நினைந்து கோவில் எடுப்பதிலேயே முழுகி இருந்தமையால் உலகியல் ஆசாரங்களை மறந்தார்.''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்,பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள் அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள். அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை'' என்று அப்பர் சுவாமிகள் உலகியல் ஆசாரங்கடந்து நின்ற அன்பே முதிர்ந்த பேரன்பு என்பதைக் குறிப்பிட்டுள்ளாரே., அது போலவும், அபிராமி பட்டர் அம்மையின் திருவருளிலே மூழ்கி இவ்வுலக ஆசாரம் கெட்டு மற்ற அந்தணர்களால் பழித்துப் பேசப்பட்டாரே அது போலவும் பூசலாரையும் மற்ற அந்தணர்கள் நிந்திக்கலாயினர். பித்தனுக்குப் பித்தாகிக் கோயில் கட்டிய அவர் திறம் உலகிற்கு அறிவிக்க வேண்டி சிவபெருமான் எண்ணி ஒரு திருவிளையாடலைத் தொடங்குகிறார். நம்மை அவனிடம் தந்தால் அவன் நம்மிடம் வந்து நமது செயல்களைப் பார்த்துக் கொள்வான். அடியாரை விளக்கம் செய்வது ஆண்டவன் கடமையன்றோ; ''எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார் இங்கே'' என்றருள் புரியும் எம்பிரான் பூசலாரின் புண்ணியச் செயலை உலகிற்கு அறிவிக்க எண்ணினான்.

காஞ்சிமாநகரில் காடவர் கோமான் என்ற பல்லவ வேந்தன் சிவபெருமானுக்குப் பெரிய திருக்கோவில் ஒன்று கட்டினான். ஆயிரக் கணக்கானோர் பணி செய்து பெருஞ்செல்வம் செலவழித்து அழகிய பிரம்மாண்டமான பெருங்கோயிலைக் கட்டிப் பூசலார் நிச்சயம் செய்த அதே நாளில் குட முழுக்கு நடத்த முடிவு செய்தான். அதற்கு முதல் நாள் சிவபெருமான் மன்னன் கனவில் தோன்றினார்.

''நின்றவூர் பூசலன்பன் நெடிதுநாள் நினைந்து
செய்த
நன்று நீடாலயத்து நாளை நாம் புகுவோம் '

''மன்ன! நீ குடமுழுக்கை வேறொரு நாள் வைத்துக் கொள். திருநின்றவூரில் பூசலார் நீண்ட நாளாகக் கட்டி வந்த திருக்கோயிலுக்கு நாளை செல்லப் போகிறேன்'' என்று கூறி மறைந்தார். காஞ்சிமன்னன் திடுக்கிட்டுக் கண்விழித்தார். சிவபெருமானே புகழ்ந்து பேசிய அந்த அன்புரையும் அவர் கட்டிய திருக்கோயிலையும் நாமும் கண்டு வணங்க வேண்டும் என்று திருநின்றவூரை நோக்கிப் பிரதானிகள் படை சூழ வருகை புரிந்தான்.

சரபோஜி மன்னர் அமாவாசையன்று காவிரிப் பூம்பட்டினத்தில் கடலாடிவிட்டு திருக்கடவூர் சென்று அபிராமியை வணங்கி அங்கு யோகத்தில் இருந்த அபிராமிப் பட்டரை யார் என அங்கிருந்தோரை விசாரித்தான். அவர் ஒரு பைத்தியம்



என்றனர். அவன் பட்டர் முகவொளியைக் கண்டு அவர்கள் கூறியதை மறுத்து அவரையே விசாரிக்க எண்ணினான். ‘இன்று என்ன திதி பட்டரே’ எனக் கேட்டான். அம்மை திருவருள் ஒளி வெள்ளத்தில் இருந்த பட்டர் ‘பௌர்ணமி திதி’ எனக்கூற அங்கிருந்தோர் சிரித்தனர். பின்னர் திருவருளால் அபிராமி அந்தாதியைப் பாட ‘‘விழிக்கே அருளுண்டு’’ என்று தொடங்கும் பாடல் பாடும்போது அபிராமி அம்மை தன் காதணியைக் கழற்றி எறிந்து பௌர்ணமி நிலவினை உண்டாக்கித் தன்னடியாரை வாழ்வித்த செய்தியினை நாம் அறிவோமன்றோ! அது போலவே காடவர் கோமான் திருநின்றவூர் வந்து பூசலார் கட்டிய கோவில் எங்குள்ளது என விசாரித்தான். அப்படி ஒன்றும் இல்லையே! பூசலார் என்று ஒரு அந்தணர் கோவிலில் உட்கார்ந்திருப்பார்,அவரை அழைத்து வருகிறோம் என்றார்கள். உடனே அரசன் மறுத்து அவரைக் காண நாமே செல்வோம் என்று கூறிப் புறப்பட்டான்.

‘‘மன்னன் சென்று பூசலாரை நோக்கித் தாங்கள் கட்டிய திருக்கோயில் எங்கேயுள்ளது. நேற்றிரவு கனவில் சிவபெருமான் இன்று தாங்கள் கோவிலில் குடிகொள்ளப் போவதாகக் கூறினார்’’ என்று சொல்லி,‘‘கனவில் கண்ணுதல் அருள் பெற்று தங்களைவணங்கவும் கோவிலைக்காணவும் வந்தேன்’’ என்றார். தான்கோவில்கட்டிய முறையைஎடுத்துச் சொல்லி ‘‘என்னையும் ஓர் பொருளாகக் கொண்டு எம்பிரான் அருள்செய்தானே’’என்று கண்ணீர் வர கதறியழுதார் பூசலார். ‘‘நம்மையும் ஓர் பொருட்படுத்தி நாய்ச் சிவிகை ஏற்றுவித்தான். அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே’’ என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுவது போல பூசலாரும் சிவபெருமான் அருள் திறத்தை நினைந்து நைந்தார். நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார். நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார், பேசப் பெரிதும் இனியார் தாமே! பிரானாய் அடி என் மேல் வைத்தார் தாமே! என்று அப்பர் சுவாமிகளும் அடிக்கடி நினைவு கூர்வார். அரசன் இதைக் கேட்டு அதிசயமுற்று அவரை மீண்டும் வணங்கிக் காஞ்சி நகரடைந்தான். பூசலார் மனத்தினால் குடமுழுக்கு நிகழ்த்தி, நலம் விளங்கப் பூசனைகள் செய்து பலநாள் வாழ்ந்து சிவபிரான் திருவடி சேர்ந்தார்.

மனம், வாக்கு, உடம்பு, என்ற மூன்று கருவிகள் மனிதனுக்கு உண்டு. உடம்பினால் தொண்டு செய்யலாம். வாக்கினால் சிவன் புகழ் பேசலாம். மனத்தினால் அவன் அருளை சிந்திக்கலாம். இம்மூன்றில் எது எளிதானது? எதுமுக்கியமானது? எது கடினமானது? எது அடிப்படையானது? என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். மூன்று கருவிகளிலும் உயர்ந்த கருவி மனம். ஏனெனில் மனம் எண்ணுவதையே வாய் பேசும், உடல் செய்யும். உடம்பினால் பல செயல்கள் கடினமான செயல்கள் கூட செய்து விடலாம். மனத்தை அடக்கி ஒரு நிலைப்படுத்தி மனத்தினால் அன்பு செய்வது என்பது கடினமானதும் ஆனால் முக்கியமானதும் அடிப்படையானதும் ஆகும். எனவே மனத்தை நேர்வழிப் படுத்துவதே நம் தேவையாகும். அதனால்தான் மனக்கோணல் தீர்ப்பதுதான் கல்வி என்றனர் சான்றோர். ‘‘மனம் எனும் தோணி பற்றி மதி எனும் கோலை ஊன்றி’’ என்றும், ‘‘காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக’’ என்றும், ‘‘சிந்தனைநின்றனக் காக்கி’’ என்றும் ‘‘வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும்’’ என்றும் ‘‘கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே’’ என்றும் கூறியுள்ளனர். மனம் அடக்கிய பூசலார் வாழ்க!

# அஞ்சல் என்றிடும் ஆனைக்கா அண்ணலே!




**தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்**

இராமனுக்கும் சீதைக்கும் மிதிலையில் திருமணம் நடக்கிறது. அவர்களது மணக்கோலத்தைப் பாடுகிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

மன்றலின் வந்து மணித் தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும் எய்தி இருந்தார்
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தே

என்பது பாட்டு. இந்தப் பாட்டைப் படிக்கும் போதெல்லாம் என் உள்ளத்தில் ஒரு சந்தேகம் எழுவது உண்டு. எப்படி ராமன் சீதை இருவரும் போகமும் யோகமும் ஒன்றிய நிலையில் இருந்தார்கள்? எப்படி இருக்கமுடியும் என்றெல்லாம் எண்ணுவேன் நான். இந்த சந்தேகம் என் உள்ளத்தில் மட்டுமே எழவில்லை. அன்னை பார்வதிக்குமே எழுந்திருக்கிறது. ஆகவே யோகம் போகம் அவற்றின் உண்மைகளைப் பற்றி ஒரு சந்தேகம் கிளப்பி அதற்கு விடையை இறைவனிடமே கேட்டிருக்கிறாள். அவரும் உடனே அதற்கு விடை சொல்லவில்லை. 'நீ பூலோகம் சென்று அங்குள்ள ஞானத் தலத்தை அடைந்து தவஞ்செய். அங்கு நான் வந்து உனக்கு உபதேசம் செய்து உன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து வைக்கிறேன்' என்று உத்தரவு போட்டிருக்கிறார். இறைவன் கட்டளைப்படியே ஞானபூமியை நாடி வருகிறாள் அன்னை. காவிரிக் கரையிலே முனிவர்களெல்லாம் இருந்து தவம் செய்யும் ஒரு சோலையைக் கண்டு அங்கு தவம் செய்ய முனைகிறாள். இன்பத்தைத் தருகின்ற முத்தியின் தன்மையைத் தெரிந்து கொள்ள வநதவள் ஆதலின் இனிய சுவை உடைய நீரையே திரட்டி லிங்கத் திருவுருவம் அமைத்துக் கொள்கிறாள். அந்த அப்புலிங்கத்துக்கே அபிஷேகம் முதலியன செய்து ஆராதனை பண்ணுகிறாள். இவள் தன் தவத்துக்கு இரங்கி இந்தக காவிற்கு வந்து சந்தேகத்துக்கு விளக்கம் கூறுகிறார். அவர் கூறும் விளக்கம் இதுதான். ''உலகங்கள் எல்லாம் என் அருள் வழியே நடப்பன. நடனத்தைப் பிறருக்குக் கற்பிக்க விரும்பும் நடன ஆசிரியன் முதலில் தானே நடனம் காட்டுதல் போல, உலக மக்களுக்கு யோக நிலையையும் போக நிலையையும் பயிற்றுவிக்க நானே நடத்திக் காட்ட வேண்டியிருக்கிறது. உலகில் உள்ள ஆன்மாக்களெல்லாம் போகத்தை நுகர உன்னை மணந்து தழுவிப் போகியாகவும் அதே சமயத்தில் யோகசித்தி பெற்று மெய்ஞ்ஞானத்தை அடைந்து உலக மக்கள் முக்திபெற யோகியாகவும் மாறுகிறேன்'' என்கிறார். ஆம்! யோக நிலையில் இருக்கும் இறைவன் போகியாகவும் காட்சி தரும் ரகசியம் இதுதான் என்று அன்னை அறிகிறாள். இந்த விளக்கத்தை அன்னை அகிலாண்டேசுவரி பெற்ற இடம் தான் திருஆனைக்கா. ஆனைக் காவுக்கே செல்கிறோம் நாம் இன்று.

ஆனைக்கா காவேரிக்கரையில், காவேரிக்கும் கொள்ளிடத்துக்கும் இடையில் உள்ள தீவில் உள்ள தலம். திருச்சி ரயில் நிலையத்திலிருந்து வடக்கே நாலு மைல் தொலைவில் இருக்கிறது. ஸ்ரீரங்கம் ஸ்டேஷனில் இறங்கி, கிழக்கே நாலு பர்லாங்கு நடந்தால் கோவிலுக்கு வந்து சேரலாம். ஆனைக்காவைத் திருவானைக்காவல் என்றும் திருவானைக் கோயில் என்றும் மக்களும் நெடுஞ்சாலைப் பொறியாளர்களும் அழைப்பார்கள். ஆனைக்கா என்றால் யானை வசித்த காடு என்று தான் பொருள். அதனாலேயே அத்தலத்தை கஜாரண்யம் எனறும் புராணங்கள் கூறும். ஏன் இப்பெயர் வந்தது என்று தெரிய தல வரலாற்றை கொஞ்சம் படிக்க வேண்டும். கைலையிலுள்ள இரண்டு கண நாதர்கள் ஏதோ சாபம் பெற்ற காரணத்தால், யானையாகவும் சிலந்தியாகவும் வந்து பிறக்கிறார்கள் இந்த ஞான பூமியிலே. இருவரும் அன்னை அகிலாண்டடேசுவரி ஸ்தாபித்த அப்புலிங்கத்தை வழிபடுகிறார்கள். லிங்கமோ ஒரு நல்ல நாவல் மரத்தடியில் காவிரிக்கரையில் இருக்கிறது. ஆற்றுத் தண்ணீரைத் தன் துதிக்கையாலே மொண்டு கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்கிறது யானை. மரத்தின் தழைகள் இறைவன் மேல் விழாதவாறு நூல் பந்தல் இடுகிறது சிலந்தி. சிலந்திக்கு யானைமீது கோபம். ஆதலால் சிலந்தி யானையின் துதிக்கையுள் நுழைந்து கபாலம் வரை ஏறி யானையைக் கடிக்கிறது. யானை வேதனை தாங்கமாட்டாமல் தன் துதிக்கையை ஓங்கி அடிக்கிறது. அதனால் சிலந்தியும் மடிகிறது. யானையும் துடிதுடித்து விழுந்து இறக்கிறது. ஆனால் இவர்கள் இருவரது பக்தியையும் மெச்சி இவர்களுக்கு முத்தி அளிக்கிறான் இறைவன். முத்தி பெற்ற யானையின் ஞாபகார்த்தமாகவே இத்தலம் ஆனைக்கா ஆகிறது. சிலந்தி மறு பிறப்பில் கோச்செங்கட் சோழனாகப்பிறக்கிறது. அந்தப் பிறவியிலும் யானை மீது கொண்டிருந்த பகையை மறக்காமல், யானை ஏற இயலாத மாடக்கோயில்களாக எழுபது கட்டுகிறான் சோழமன்னன். எழுபதுகோயில்களில் படிஏற இயலாத யானையும் ஒரு கோயிலைத் தன்னுடையதாக -ஆனைக்காவாகவே ஆக்கிக் கொள்கிறது. இத்தனையும் கூறுகிறார் திருநாவுக்கரசர்.



சிலந்தியும் ஆனைக்காவில்
திருநிழல் பந்தல் செய்து
உலந்து அவண் இறந்தபோதே
கோச் செங்கணானுமாக
கலந்தநீர் காவிரிசூழ்
சோணாட்டு சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார்
'குறுக்கை வீரட்டனாரே

என்று திருக்குறுக்கை என்னும் தலத்தில் பாடுகிறார்.

இனி கோயிலுள் செல்ல முனையலாம். நல்ல தென்னஞ் சோலைக்கு நடுவிலே கோயில் அமைந்திருக்கிறது. கோயிலுக்குக் கீழ்ப்புறத்தில் உள்ள ஊர்களின் பெயரே, திருவளர்ச்சோலை, உத்தமர் சேரி என்று. இந்தப் பெயர்களைச் சொல்லும் போதே நா இனிக்கும். இந்தக் கோயிலுக்கு ஐந்து பிநாகாரங்கள் மேற்கேயிருந்து கிழக்கு நோக்கி வரும்போது முதல் இரண்டு பிரகாரங்களிலும் உள்ள கோபுர வாயிலைக் கடநதுதான் வரவேண்டும். அந்தப் பிராகாரங்களில் மக்கள் குடியிருக்கும் வீடுகள் நிறைந்திருக்கும். மூன்றாம் பிராகாரத்திலிருந்துதான் கோயில் மண்டபங்கள் ஆரம்பமாகின்றன என்றாலும், நான்காம் பிராகாரத்து மதில் சுந்தரமாறன் மதில்ஆகும். ஐந்தாம் பிரகார மதில்தான் பெரிய மதில். இந்த மதிலையே திருநீற்று மதில் என்று கூறுகிறார்கள். விசாரித்தால் இம்மதில் கட்ட மன்னன் முனைந்தபோது சித்தர் ஒருவர் தோன்றி வேலை செய்தவர்களுக்கெல்லாம் திரு நீற்றையே கூலியாகக் கொடுத்திருக்கிறார். அத்திருநீறே பின்னர் ஒவ்வொருவர் கையிலும் பொன்னாக மாறியிருக்கிறது. (இப்போதும் கோயிலில் நமக்குக் கொடுக்கும் திருநீறெல்லாம் பொன்னாகமாறுகிறது என்றுமட்டும் ஆகிவிட்டால் கோயிலுக்கு வருவார் தொகையே பெருகிவிடாதா) இந்த மதிலை எல்லாம் கடந்து வந்தால் வடபக்கம் ஆயிரக்கால் மண்டபத்தை காண்போம். அதற்கு எதிரே ஒரு பெரிய மண்டபத்தை அடுத்துத் திரிமூர்த்திகள் கோயில். அங்கு சென்று படி ஏறினால் ஓர் அதிசயம் காத்து நிற்கும ஆம்! பிரம்மா, விஷ்ணு, சிவன் எல்லோருமே லிங்கத் திருவுருவலே தனித்தனிகோயில் இருப்பார்கள். இந்த மூவரும் சேர்ந்த திருஉருவம் ஒன்றும் அங்குள்ள தூணில் இருக்கும். அதனையே ஏகபாத திரிமூர்த்தி என்று கூறுவார்கள். இத் திரிமூர்த்திகளையும் வணங்கிய

## அரிவையர் போற்றும் ஆனைக்கா

**அன்புடைய பெண்மணிகள் சிவபெருமானை
இசையுடன் ஆடியும் பாடியும் நாடியும்
வணங்கும் இனிய திருத்தலம் திருவானைக்கா.**

**"ஆசைத் தோகைமார்கள் இசையுடன்
ஆடிப்பாடி நாடிவரு திருவானைக்கா"**

**—அருணகிரிநாத சுவாமிகள்**

பின் துவஜஸ்தம்ப மண்டபத்துக்கு வருவோம். அந்த மண்டபம் பிரும்மாண்டமான மண்டபம். அம்மண்டபத்தை நான்கு பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணுக்கும் மேல் எட்டு சிங்கங்கள்மண்டபத்தையே தாங்கிநிற்கும். மேலும் இத் தூண்களில் எல்லாம் தல வரலாறுகளைத் தெரிவிக்கிற சிற்ப வடிவங்கள் உண்டு. இவற்றையெல்லாம் கண்டு அதிசயித்த பின்னரே அடுத்த சோமாஸ்கந்த மண்டபத்துக்குச் சென்று அந்தப் பிராகாரத்தைச் சுற்ற வேணும். அப்படிச் சுற்றி வரும்போது கீழ்ப்புறம் கருவறைமேல் கட்டப்பட்ட விமானத்தை ஒட்டி வெண்நாவல் மரம் ஒன்று விரிந்து பரந்திருக்கும். இதனை இரும்பு அழிபோட்டுப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். இங்கு சம்பு முனிவர் இருந்து தவம் செய்திருக்கிறார். இந்த மரத்தின் அடியிலேயே இறைவன் வதிவது காரணமாக இத்தலத்துக்கே சம்புகேசுவரம் என்ற பெயரும் நிலைத்திருக்கிறது. இதனையும் கடந்து மேற்கு நோக்கி வந்தே கருவறை வாயில் செல்ல வேணும். இறைவன் மேற்கே பார்க்க லிங்க வடிவில மிகத் தாழ்ந்த இடத்தில் இருக்கிறார். அவர் சந்நிதிக்கு முன் ஒன்பதுதுவாரங்கள் கொண்டு ஒருகல் பலகணி உண்டு. அதன் வழியாகத் தரிசித்த பின்னரே தென பக்கம் உள்ள வாயில் வழியாக அந்தராளம் செல்ல வேணும். அங்கு நான்கைந்துபேர்கள் நிற்பதேமிக்க சிரமம். ஆதலால் முன் சென்றவர் எல்லாம் வெளி வரும் வரையில் காத்திருந்தே பின் சென்று வணங்குதல் கூடும். இங்கே எப்போதும் நீர் பெருகிக் கொண்டேயிருக்கும். அர்ச்சகரும் தண்ணீரை எடுத்து வெளியே கொட்டிக் கொண்டேயிருப்பார். அன்னை பிடித்தமைத்த அப்புலிங்கம் அல்லவா. அங்கு நீர் பொங்கி வழிவதில் வியப்பு என்ன? இப்படி அப்பு வடிவிலும், லிங்க வடிவிலும உள்ள இறைவனை வணங்கி வெளியே வரும்போது

''தென்னானைக் காவானை தேனைப்
பாலை, செழுநீர்த்திரளைச்
சென்று ஆடினேனே''

என்று நாவுக்கரசரோடு சேர்ந்து நாம் பாடிக் கொண்டே வரலாம்.

இனி நாம் கிழக்கு நோக்கி நிற்கும் அகிலாண்டேசுவரி சந்நிதியை நோக்கி விரையலாம். இத்தலத்திலேயே இறைவனாம் அப்பு லிங்கத்தைவிட அருள்பாலிக்கும் பெருமை உடையவள் அகிலாண்டநாயகிதான். அவள் 'அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே என்றாலும் பின்னரும கன்னி என மறைபேசும் ஆனந்தரூப மயில்'. ஆதலால் மற்ற பிராகாரங்களை எல்லாம் கடந்து அவள் சந்நிதிக்கு வந்து சேரலாம். அவளை எதிர்நோக்கி இருப்பவர். சங்கராச்சரிய சுவாமிகள் ஸ்தாபித்த விநாயகர். அன்னையின் வடிவம். நல்ல கம்பீரமான வடிவம். கருணை பொழிகின்ற திருமுகம். வணங்கும் அன்பருக்கெல்லாம் அட்டமாசித்திகளை அருளுகின்றவள். இவ்வன்னையைத் தாயுமானவர் வணங்கியிருக்கிறார். பாடியிருக்கிறார்.

அட்டசித்தி நல் அன்பருக்கு அருள
விருதுகட்டிய பொன் அன்னமே!
அண்டகோடி புகழ்காவை வாழும்
அகிலாண்டநாயகி என் அம்மையே

என்பது அவரது பாட்டு. இநத அம்மையே இறைவனைப் பிரதிஷ்டை செய்து பூசித்ததாக வரலாறு. அதனால் இன்றும் உச்சிக் காலப் பூசையின் போது இந்த அம்மன் கோயில் அர்ச்சகர் பெண் வேடம் தரித்து இறைவனைப் பூஜிக்கிறாராம். ஆம் திருவாரூரில் அர்ச்சகர் தேவேந்திரனைப் போல

## திருச்சாலகச்சோதி

**திருவானைக்கா கோவிலில் சுவாமி சந்நிதிக்கு நேரே மேற்கில் உள்ள சுவற்றில் ஒன்பது துவாரங்களுடன் அமைந்த சாளரம் ஒன்றுண்டு.**

**இதன் வழியாக இறைவனைத் தரிசித்தார் நவதீர்த்தங்களில் முழுகிய பயனைப் பெறுவார்கள்.**

**''திருச்சாலகச்சோதி தம்பிரானே''**

**—அருணகிரிநாதர்**

ராஜகம்பீர உடை அணிந்து தியாகராஜரைப் பூசிப்பது போல.

இந்த அப்புலிங்கம் என்னும் அமுதலிங்கரும் அகிலாண்டநாயகியும் தங்கள் சொத்தைப் பராமரித்துக் கொள்வதிலேயே மிக அக்கறை உடையவர்கள் என்றும் தெரிகிறது. அதற்கு ஒரு சிறு கதையும் இருக்கிறது. அக்காலத்தே உறையூரிலிருந்து அரசாண்ட சோழ மன்னன் ஒருவன். அந்த அன்னையையும் அத்தனையும் வழிபட வந்திருக்கிறான் தன் மனைவியுடன். மனைவியின் கழுத்தில் கிடந்த முத்தாரத்தை இறைவனுக்கு அணிந்தால் அழகாயிருக்குமே என்று எண்ணியிருக்கிறான். இந்த எண்ணத்தோடேயே வருகிற வழியில் காவிரியில் நீராடி இருக்கிறார்கள் அரசனும் அரசியும். குளித்து எழுந்தால் அரசி கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் காணோம். கழுத்தில் இருந்து நழுவி ஆற்றில் விழுந்திருக்கிறது. தேடிப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் கிடைக்கவில்லை. பின்னர் சோர்வுடனேயே கோயிலுக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் சந்நிதியில் வந்து சேர்ந்தபோது அங்கு இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுகிற நேரமாக இருந்திருக்கிறது. காவிரியிலிருந்து குடத்தில் நீர் கொண்டு வந்து திருமுழுக்கு நடக்கிறது. என்ன அதிசயம்! அந்தக் குடத்துக்குள்ளிருந்து முத்தாரம் இறைவன் முடி மேலேயே விழுகிறது. மன்னனும் அரசியும் இறைவனது அளப்பரிய கருணையை வியக்கிறார்கள்.

வழக்கமாக எல்லாச் சிவன் கோயில்களிலும் நடக்கும் திருவிழாக்கள் இக்கோயிலில் உண்டு. இத்துடன் பங்குனி மாதம் சித்திரை நாளில் பஞ்சப்பிரகார உத்சவம்என்று ஒன்று சிறப்பாக நடைபெறும். அன்று ஒரு வேடிக்கை; இறைவன் பெண் வேடத்தோடும் இறைவி ஆண் வேடத்தோடும் திருவீதி உலா வருவர். ஏன் இந்த வேடம் இவர்கள் அணிகிறார்கள் என்பதற்கு ஒரு புராண வரலாறு உண்டு. பிரமன் தான் படைத்த பெண்ணொருத்தியின் அழகிலே மயங்கி நிறை அழிகின்றார். அதனால் படைத்தல் தொழிலே செய்ய முடியாமல் திணறுகிறான். தன் தவறை உணர்ந்து அதற்கு மன்னிப்புப் பெறத் தவம் செய்கிறான். தவத்துக்கு இரங்கிய இறைவன் இறைவியோடு பிரமன் முன்பு எழுந்தருள்கிற போதுதான் இப்படி வேடம் தரித்து வந்திருக்கிறார்கள். ஆம். இறைவனுக்கு ஒரு சந்தேகம், இந்தப் பிரமன் இறைவியின் அழகைக்கண்டு மோகித்தால் என்ன செய்வது என்று, இந்த வேடத்

தில் இவர்களைக் கண்ட பிரமன் வெட்கித் தலை குனிகிறான். பின்னர் அவன் விரும்பிய வண்ணமே அருள் பெறுகிறான். இந்தச் சம்பவத்தை நினை வூட்டவே இந்தப் பஞ்சப் பிரசார உற்சவம், அதில் இந்த வேடம்.

இத்தலத்துக்குச் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மூவரும் வந்திருக்கிறார்கள். சம்பந்தர் இத்தலத்தி தில் இருந்துகொண்டே கயிலாயம், மயேந்திரம், ஆரூர் முதலிய தலங்களையும் நினைத்திருக்கிறார். பாடியிருக்கிறார்.

மண்ணது உண்ட அரிமலரோன் காணா
வெண்ணாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணது ஓங்கிய கயிலையாரும்
விண்ணல் ஆரூரர் ஆதி ஆனைக்காவே

என்பது அவரது தேவாரம், செழு நீர்த்திரளாம் அப்புலிங்கரை அப்பர் பாடியதைத்தான் முன்பே கேட்டிருக்கிறோமே. நாத்திகர்களுக்கு நல்லறிவு புகட்டும் இன்னொரு பாடல் இதோ:

''நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே

படைகள் போல வரும் பஞ்சமா பூதங்கள்

தடை சிறிதின்றியே தன்னடைந்தவர்க் கெலாம்

அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே''

சுந்தரரும்,

அறையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை, நாளும்
இறைவன் என்று அடி சேர்வார்
எம்மை ஆளுடையாரே

என்று பாடிப் பரவியிருக்கிறார். இப்பாடல்களை யெல்லாம் பாடிக்கொண்டே கோயிலை வலம் வர லாம்; வெளியேறியும் வரலாம்.

இக்கோயிலில் நூற்று ஐம்பத்து நான்கு கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து இந்தக் கோயிலைக்கட்டியவர்கள், நித்திய நைமித் தியங்களுக்கும் நந்தா விளக்குகளுக்கும் நிபந்தங் கள் ஏற்படுத்தியவர்களையும் தெரிந்து கொள்ள லாம். பிற்காலத்துச் சோழர், பாண்டியர், ஹொய் சலர், விஜயநகர மதுரை நாயக்க மன்னர்களைப் பற்றி எல்லாம் பல பல கல்வெட்டுகள், ஹொய் சல மன்னர்களைப் பற்றிய கல்வெட்டுகள் அதிகம்.

# எமன் வந்து அடிக்கும் 'மட்கலம்' தேகம்

காகமொடு கழுகு அலகை
நாய்நரிகள் சுற்றுச்
சோறிடு துருத்தியைக்

காலிரண்டு நவ வாசல்
கொண்டு வளர்
காமவேள் நடன சாலையை

மோகம் ஆசை முறியிட்ட
பெட்டியை மும்மதம்
மிகுந்தொழுகு கேணியை

மொய்த்து வெங்கிருமி நத்துக்
கும்பியை முடங்கலார்
கிடைச்சரக்கினை


மாக இந்த்ரதனு மின்னை
ஒத்திலக
வேதம் ஓதிய குலாலனார்

வனைய வெய்ய தடி
காரனான யமன்
வந்தடிக்குமொரு மட்கலம்

தேகமான பொய்யை
மெய்யெனக் கருதி
ஐய வையமிசை வாடவோ

தெரிதற்கரிய பிரம்மமே
அமல சிற்சுகோதய
விலாசமே

—தாயுமானவர்



# தீர்த்தங்கள் நிறைந்த தீர்த்தமலை


**டி. என். இலட்சுமண குருக்கள்**

**தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம், தீர்த்தமலை.**


தர்மபுரி மாவட்டம், அரூரிலிருந்து கோட்டப்பட்டி செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் 16 கி.மீ. தொலைவில் லிங்க வடிவாக அமைந்துள்ளது தீர்த்தமலை. தர்மபுரி மாவட்டத்திலேயே அருணகிரிநாதரால் பாடப் பெற்ற ஒரே ஒரு தலம், இந்தத் தீர்த்தமலைதான் என்பது குறிப்பிடத்தக்கது. பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றான திருவண்ணாமலையின் ஸ்தல புராணத்தைப் பாடியருளிய தவத்திரு சைவ எல்லப்ப நாவலர் அவர்களே இத்தலத்தைச் சிறப்பித்துக் கவி நயத்தோடும், கற்பனை நயத்தோடும் தல புராணம் பாடியுள்ளார்.

இங்கே எழுந்தருளிய அன்னையின் பெயர் அருள்மொழி வடிவாம்பிகை, அப்பனின் பெயர் அருள்மிகு தீர்த்தகிரி ஈஸ்வரர், மலையின் மீது சுமார் 1 கி.மீ. தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு சுயம்பு மூர்த்தியாய் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் லிங்கத்தை மையமாக வைத்து பிற்காலத்தில் இத்திருக்கோயில் கட்டப்பெற்றிருக்கும் என்பதை நேரில் காணும் அன்பர்கள் நன்கறிவர்.

கருவறையில் பின்புறம் ஐந்து தீர்த்தங்களும் மலையின் பிற பகுதிகளில் ஆறு தீர்த்தங்களுமாக பதினொரு தீர்த்தங்களால் புகழுடன் விளங்குவதால் இம்மலை தீர்த்தமலை என்றும், எழுந்தருளியுள்ள இறைவர் தீர்த்தகிரீசுவரர் என்றும் திருப்பெயர்கள் கொண்டுள்ளனர்.

இங்கே மலைக்கோவிலே பிரதானக்கோவில் என்றாலும், விழாவெடுத்தல் பொருட்டு, மலையடியில் சுமார் ஆறு ஏக்கர் நிலப் பரப்பில் சுற்று மதில் சுவர்களோடு அழகிய திருக்கோயில் ஒன்றும் அமைக்கபபெற்றுள்ளது. மலைக்கோவில் கருவறையின் நுழைவாயில் வடக்கு நோக்கியும், கீழ்க்கோவில் கருவறையின் நுழைவாயில் தெற்கு நோக்கியும அமைந்துள்ளன.

### வரலாற்றுச் செய்திகள்

புராண இதிகாச வரலாற்றுத் தொடர்புடைய தீர்த்தமலையில், இராஜேந்திர சோழ மன்னனின் ஆட்சியாண்டாகிய கி.பி. 1040-இல் திருக்கோவிலின் முன் மண்டபம் புதுப்பிக்கபட்டு, நிவந்தங்களும் அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டொன்று கூறுகிறது. அதற்கு பிறகு பெரிய திருப்பணிகள், வேறு எதுவும் நடைப்பெற்றதாகத்தெரியவில்லை. இதனால், இத்திருக்கோயில் யாரால் எப்பொழுது கட்டப்பெற்றதென அறிய இயலாதவாறு அமைந்துள்ள தொன்மையை அறியலாம்.

இதைத்தவிர சோழர்கள், கங்கர், சாளுக்கியர், நாயக்கர் காலங்களில் செய்யப்பட்ட திருப்பணிகள் அறக்கொடைகள் பற்றிய 18 கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல்வெட்டுக்கள் 1909-ல் கல்வெட்டுத்துறையினரால் படி எடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் வரலாற்றுத் தொன்மையை அறியலாம்.

### தலவரலாறு

தட்சனின் மகள் தாட்சாயிணியாக தோன்றிய அன்னை ஆதிபராசக்தியை மணந்தார் எம்பெருமான். அகில அண்டங்களுக்கெல்லாம் மூலப் பொருளாய்-முழுமுதற் பொருளாய் விளங்கும் இறைவனின் உண்மையை மதியாது—நான்—எனது என்னும் அகங்காரத்தில் யாகம் செய்தான் தட்சன். அன்னை ஆதி சக்தியின் அறிவுரையையும் ஏற்க மறுத்த தட்சனின் அகங்காரத்தை அழிக்க வீரபத்திரனை ஏவினார் எம்பெருமான். யாகம்தடைப்பட்டது. தக்கனின் அகந்தையும் அழிந்தது. ஆனால் தம்மையும், தமக்கு தலைவனாக விளங்கும் இறைவனின் பெருமைகளையும் உணராமல் தக்கனின் அதிகாரத்திற்கு பயந்து, அவனது யாகத்தில் கலந்துகொண்ட திருமால், பிரமன் முதலான மூர்த்திகளும், தேவர்களும், முனிவர்களும், தமது அறியாமையிலிருந்து விலகி அறிவு பெற இறைவன் தன்னை மறைத்து இங்கே இத் தீர்த்தமலை வடிவாக எழுந்தருளியுள்ளார் என்பது தலபுராண வரலாறாகும்.

எம்பெருமான், தமது ஐந்தொழில்களுள் ஒன்றான மறைத்தல் செயலை மேற்கொண்டபோதும் உயிர்களின் பால் கொண்ட கருணையினால், அவ்வுயிர்களுக்கு அருளுதல் வேண்டி, இம்மலையிலும், மலையைச் சுற்றிலும் பதினொரு தீர்த்தங்களை வழங்கியுள்ளார். காணார்க்கும் கண்டவர்க்கும் களிப்பருளும் களிப்பல்லவா இறைவன்!

### தீர்த்தங்கள்

கௌரி தீர்த்தம், குமாரதீர்த்தம், இராமர் தீர்த்தம், அக்கினிதீர்த்தம், அகஸ்தியர் தீர்த்தம், ஆகிய ஐந்தும் மலைக்கோவிலின் பின்புறம் இருக்கின்றன. வசிஷ்டர் தீர்த்தம் மலைக் கோவிலில் இருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் மேலே உள்ளது..

யமதீர்த்தம் மலையின் பின்புறம் வேப்பம்பட்டியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது. வருணதீர்த்தமும் வாயு தீர்த்தமும் அரூர் பேருந்து

நிலயத்தின் அருகில், வருணீஸ்வரர் திருக்கோயிலின் முனபுறம் உள்ளன. அனுமன் தீர்த்தம், தீர்த்தமலையிலிருந்து 6 கி.மீ. தொலைவில் தென்பெண்ணை ஆற்றின் நடுவில் உள்ளது. இந்திர தீர்த்தம் என்பது மலைக்குக் கிழக்கே மொண்டுகுழி என்னுமிடத்தில் தென்பெண்ணை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

இந்தப் பதினொரு தீர்த்தங்களும் முறையே, பார்வதி, முருகன், ஸ்ரீராமன், அக்கினிதேவன், அகத்திய முனிவர், வசிஷ்டர், யமன், வருணன், வாயு, அனுமன், இந்திரன் ஆகியவர்களுக்கு இறைவன் தனது தனிப்பெருங் கருணையினால் வழங்கியவையாகும். தல புராணத்தில் தனித்தனியாக ஒவ்வொரு தீர்த்தத்திற்கும் வரலாறு காணப்படுகிறது.

இவற்றுள் இரும்புத்தாதுகளும், அற்புதமூலிகைகளின் சத்தும் கலந்து விளங்குவதால் நாடி வரும் பக்தர்கள் உடலின் பிணியும், உள்ளத்தின் பிணியும் நீக்கப் பெற்றுப் புத்துணர்வும், புதுவாழ்வும் அடைந்து வருகினறனர் என்பது உறுதி.

கண்ணைக்கவரும் கலையழகோ, பிற வசதிகளோ இல்லாதிருந்தும் இத் திருக்கோவிலுக்கு நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான பக்தர்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்டிருக்கும் நிலை ஒன்றே இங்கெழுந்தருளியுள்ள இறைமையின் பெருங்கருணைக்குப் போதிய சானறாகும்.

**சித்தர்கள் உலவும் சிவத்தலம் :**

''கவன சித்தர் வந்து வந்கு காய சித்தி விளைப்பர்' எனக் குற்றாலமலை சிறப்பிக்கப்படுகிறது. இங்கே பல சித்தர் பெருமக்கள் நிலையாக இருந்து நெடுந்தவப் புரிந்து வருகின்றனர் என்பதற்குச் சான்றாக இம்மலைக்குச் ''சித்த நிவாஸம்'' ''தவசாரகிரி'' என்னும் திருப் பெயர்கள் வழங்கப்படுகின்றன. அன்றியும்.

''அட்டசித்தி உதவும் மலை அநேகமுள, ஆனாலும்
இட்டசித்தி உதவுமலை இதுபோலவே இல்லை,
எவர்க்கும்
கிட்டரிய காரியசித்தி கிரியையுடன் யோக சித்தி
மட்டரிய ஞானசித்தி மற்றெவையும் பெறலாமே''

என இதன் தலபுராணம் கூறுவதைக் காண்க. வசிட்டர், அகத்தியர், பாம்பாட்டிச் சித்தர், போகர் போன்ற சித்தர் பெருமக்கள் இப்போதும் இங்கே தவம் செய்கின்றனர் எனப் பல ஆன்ம வளர்ச்சி பெற்ற ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

**இராமேஷ்டம் :**

இப்பூவுலகில் அவதாரம் செய்த ஸ்ரீராமன், எல்லாம் வல்ல சிவபெருமானை இரண்டிடங்களில் பிரதிஷ்டை செய்து வழிபட்டுள்ளார். ஒன்று தமிழ் நாட்டின் தென்முனையில் புகழுடன் வளங்கும் இராமேஷ்வரம். மற்றது புனித தீர்த்தங்கள் நிறைந்த இந்தத் தீர்த்த மலை. அங்கேயும் பல புண்ணிய தீர்த்த குளங்களில் நீராடி மக்கள் புனிதமடைகின்றனர்; இங்கேயும் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கித் தங்கள் பாவங்களை நாசம்செய்கின்றனர். அதனால் இதற்கு ராமேஷ்டம், பாவ விநாசம், துக்கவாரம், சோகஹரம் என்றும் திருப் பெயர்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வட்டெழுத்துடன் அஷ்டபுஜ துர்க்கை:**

ஈஸ்வரர் சன்னதிக்கும் உமையவள் சன்னதிக்கும் நடுவில் அமைந்துள்ள இராமலிங்கம் சன்னதிக்கு எதிரில் வடக்கு நோக்கி அமர்ந்திருக்கிறாள் அன்னை துர்க்கை. அவளுக்குப் பிரபை போல வட்டெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ''ஸ்ரீப வதி, துர்க்கா சூலினி'' என்ற வட்டெழுத்துக்கள் மட்டும் சிதையாமல் காணப்படுகின்றன

**காண வேண்டியவை :**

கிழ்க்கோவிலில் அழகுடன் பல ஆபரணங்களை அணிந்து விளங்கும் அதிகார நந்தி, மான்மழுவுடன் சிவச்சின்னமணிந்து ஆஞ்சநேயர் அமைப்பில் உளளது. ''இதுபோன்ற அமைப்புள்ள அதிகார நந்தி இங்கும், மற்றொன்று திருநெல்வேலியில் மட்டும்தான் உள்ளதென தெரிகிறது.

கலைநிறை கணபதி, ஆறுமுகத்துடன் தெற்கு நோக்கி மயில் மீது ஆரோகணித்து நிற்கும் ஞான பண்டித வேலன், அன்னை வடிவாம்பிகையின் அழகிய தோற்றம் ஆகியன அவசியம் காணவேண்டியவை ஆகும்.

அருணகிரிநாதர் இப்புனிதத் தலத்தில் உள்ள முருகரை வழிபட்டுப் பாடியுள்ளார்.

''தீர்த்த எனதகம் ஏட்டை உடன்நினை
ஏத்த அருளுடன் நோக்கி அருளுநீ
தீர்த்த மலைநகர் காத்த சசிமகள்
பெருமாளே''

என்பது அவர் வாக்கு.

மலை மீது அமைந்துள்ள உச்சிப்பிள்ளையார், வசிஷ்டர் குகை, பாம்பாட்டிச் சித்தர் குகை, சீல நாய்க்கன் காலத்தில் கட்டப்பட்டுச் சிதைந்து காணப்படும் கோட்டை, நீர்க்கிணறு போன்றவையும் காணத் தக்க அற்புதங்கள் வாய்ந்தவையாகும.

**விழாக்கள்:**

ஆடிப் பதினெட்டில் பல ஆயிரம் பக்தர்கள் இங்கேவந்து அனுமன் தீர்த்தத்தில்நீராடி, பின்னர் தீர்த்தமலையில் நீராடி, அருகில 6 கி.மீ. தொலைவிலுள்ள சென்னம்மாள் கோவிலுக்குச் சென்று தென்பெண்ணையாற்றில் நீராடி மகிழ்கின்றனர் ஏராளமான பேருந்துகள் இதற்காக நாள் முழுவதும் வந்து சென்ற வண்ணமாக இருக்கும்.

மாசிமாதம் பௌர்ணமியும், மக நட்சத்திரமும் கூடிய நன்னாளில் கொடியேற்றப்பட்டு 5-ம் நாள் திருமணம், 7ஆம் நாள் திருத்தேரும், 10-ம் நாள் விடையாற்றியும் நடைபெறும். இந்தப பத்து நாட்களிலும் பல்வேறு உபயதாரர்கள் ஜாதி மத வேறுபாடுகளின்றித் தனித்தனி உற்சவங்கள் நடத்துகின்றனர்


**ஜாதி மத பேதமில்லை:**

ஆதி திராவிடர், அருந்ததியர், மலைஜாதி மக்கள் ஆகியவர்களும் இந்தப் பத்து நாட்கள் தங்களுக்காக ஒவ்வொரு உற்சவத்தை உபயமாகச் செய்து மகிழ்கின்றனர்.

சைவம், வைஷ்ணவம் என்ற பேதமின்று இங்கே இராமர் தீர்த்தத்தில் நீராடி சிவனை வழிபடுகின்றனர். இங்கே ஞான மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு முன் ஜாதி மத வேறுபாடுகளாகிய குப்பைகள் எரிந்து சாம்பலாகிவிடுகின்றன போலும்.

**வழிகள் :**

திருவண்ணாமலையிலிருந்து சாத்தனூர் அணையைக் கண்டு களித்தபின், தானிப்பாடி வழியாகத் தீர்த்தமலைக்குவரலாம். சேலத்திலிருந்து அரூர் வழியாகவும் இங்கே வரலாம். வேலூர் திருப்பத்தூர், ஊத்தங்கரை அனுமன்தீர்த்தம் வழியாகவும் இம்மலைக்குஅன்பர்கள் வந்து செல்ல பேருந்து வசதிகள் நிறைய இருக்கின்றன. சென்னை சேலம் புகைவண்டித் தொடரில் வருவோர் மொரப்பூரில் இறங்கி அரூர் வழியாக இங்கே வரவும் வசதி உண்டு.



# விளக்கிட்டார் பேறு சொல்லின்

மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

ஆதியில் மக்கள் இயற்கையை வணங்கினார்கள். அவர்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதிருந்த பஞ்சபூதங்களை (தீ, நீர், காற்று, நிலம், ஆகாயம்) யும் அவைகளுக்குக் காரணமாயிருக்கும் சூரியன், சந்திரன், அக்னி, நதி முதலியவைகளையும் வணங்கி வந்தார்கள். இவைகளுக்குக் காரணமாகவும் ஒருவன் இருக்க வேண்டுமென்று உணர்ந்து அவனை ஆதி தேவன் என்றும் பரம்பொருள் என்றும் கடவுள் என்றும் வணங்கினார்கள். பிறகு உருவம், அருவம், உருவருவமாக அப்பரம் பொருளை உணர்ந்து வழிபட்டார்கள்.

தானே இருநிலந் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும் அங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழை பொழி தையலுமாய் நிற்குந்
தானே தடவரை தண்கடலாமே —திருமந்திரம்.

ஆக மண்ணையும் விண்ணையும் சுடுகின்ற அக்னியையும் சூரியனையும், சந்திரனையும் மழையையும் கடலையும் கடவுளாகவே வழிபட்டார்கள்.

பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
பிரமன் மால் தங்கள் தம் பேதமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்து முன்நிற்க
அரனடி தேடி அரற்றுகின்றாரே.
—(திருமந்திரம்)

இவ்வாறு பிரமனும் மாலும் அடியும் முடியும் காண முடியாதபடி அனலாய்ப் பரந்து விண்ணும் மண்ணும் நிறைந்து அவர்கள் முன்நிற்கிறார். பிரமனும் மாலும் ஒவ்வொருவரும்தானே பிரான் (தலைவன்) என்று பேதமையால் (அறியாமையால்) தர்க்கித்து செருக்குற்றதால் பரமன் அனலாய் பரந்து நின்றான். அனலாய் நின்றவனின் அடியையும் முடியையும் காண்கின்றவர்தான் பிரான் என்று ஒப்புக்கொண்டுதேடினர். ஆனால் அவர்களால் தேடிக் கண்டுக் கொள்ளமுடியவில்லை. அதனால் இருவரும் தங்கள் செய்கைக்கு வருந்தி சிவனை வழிபட்டார்கள். அவர்களுக்கு இரங்கி சிவபெருமான் மாலுக்குச் சக்கரமும் பிரமனுக்கு வாளும் கொடுத்தார். இதையும் திருமூலரே கூறுகின்றார்.



## பாடாத நாளே பட்டினி நாள்!

கண்ணா! நான்முகனைப் படைத்தோனே!
காரணா! கரியாய் அடியேன்நான்
உண்ணா நாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோ நாரணா வென்று
எண்ணா நாளும் இருக்கெசுச் சாம
வேதநாண்மலர் கொண்டுன் பாதம்
நண்ணாநாள் அவை தத்துறுமாகில்
அன்றெனக்கவை பட்டினி நாளே!
—பெரியாழ்வார்.

ஆழி வலக் கொண் டயன் மால் இருவரும்
ஊழி வலஞ் செய்ய ஒண்சுட ராதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழி பிரமற்கும் வாள் கொடுத்தானே
—திருமந்திரம்

இந்த நிகழ்ச்சியை மக்கள் உணர்ந்து கொள்ளும் பொருட்டுதான் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தன்று திருவண்ணாமலையின்மீது தீபம் ஏற்றி வழிபடுகின்றோம். அன்று எல்லா வீடுகளிலும் கோயில்களிலும் வரிசையாக விளக்கேற்றி வைத்து வழிபடுகின்றோம். திருவண்ணாமலையில் உள்ள மலையே அனலாயிருந்தது என்றும் இந்தக் கோயிலில் உள்ள சிவபெருமான் வேணுகோபால சுவாமி அருணாசலீஸ்ரர் என்றும், அடி அண்ணாமலையில் உள்ள கோயிலில் உள்ள சிவபெருமான் பிரம்மபுரீஸ்வரர் என்றும் சொல்லப்படுகிறது. நம் வீடுகளிலும் மூன்றுநாட்கள் தீபங்கள் ஏற்றிவைத்து வழிபாடு செய்கின்றோம். முதல் நாள் சிவன் கார்த்திகை என்றும் இரண்டாம் நாள் விஷ்ணு கார்த்திகை என்றும் மூன்றாம் நாள் வேறு பெயராலும் சொல்லுகின்றோம். மூன்றாம் நாள் பிரமன் கார்த்திகை என்றுதான் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

இது முதல் விண்ணவரும் மண்ணவரும் சிவபெருமானை ''சோதியே சுடரே'' என்று போற்றி வந்துள்ளார்கள். திருஞான சம்பந்தர் தம் பதிகம் ஒவ்வொன்றிலும் மாலும் அயனும் அடிமுடி தேடி காண முடியாத நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு சிவபெருமானின் ஆற்றலைப் போற்றியுள்ளார். இதே போல் மற்ற நாயன்மார்களும் திருமுறை ஆசிரியர்களும் சிவனைப் போற்றியுள்ளார்கள். ஆகவே சோதி வழிபாடு நம் நாட்டில் பரவலாக இருந்து வந்துள்ளது.

''இருந்து வீடும்'' என்று தொடங்கும் பொது திருப்புகழ்பாடலில் 'விளங்குதீபம் கொண்டு உனை வழிபட அருள்வாயே' என்றும் ''இத்தரணி மீதில்'' என்று தொடங்கும் மற்றொரு பொதுத்திருப்புகழ் பாடலில் 'நிருத்த ஜகசோதிப் பெருமாளே' என்றும் திருவாவினன்குடித் திருப்புகழ் - ''நாத விந்து'' எனத் தொடங்கும் பாடலில் 'தீபமங்கள ஜோதி நமோநம' என்றும் அருணகிரி நாதர் பாடியுள்ளார்.

மாணிக்க வாசகர் திருவெம்பாவை முதல் பாடலில் ''ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதி'' என்று பாடியுள்ளார்.

வடலூர் வள்ளலாரும் அருட்பெருஞ்சோதி அகவலும் அருட்பெருஞ்சோதி அஷ்டகமும் பாடியுள்ளார்.

அப்பர் பெருமான் ''திருவையாநகலாத செம்பொற்சோதி'' என்றும் ''தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே'' என்றும் ''துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள் விளக்கிடு காணாதே போதியோ பூம்பாவாய்'' என்று திருஞான சம்பந்தரும் ''துணை என்று நான் தொழப்பட்ட ஒண்சுடரே'' ''பாசுபதா பரஞ்சுடரே'' என்று சுந்தரரும் இறைவனைப் பாடியுள்ளார்கள்.

இதே போன்ற மற்ற திருமுறை ஆசிரியர்களும் பாடியுள்ளார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருக்கோயிலில் திருவிளக்கேற்றித் தொண்டு செய்து முத்தியடைந்தவர்கள் மூவர். அவர்கள் நமிநந்தி அடிகள், கலிய நாயனார், கணம்புல்லர்.

நமது நாயன்மார்களில் பலர் சிவபெருமானின் சோதியில் இரண்டறக் கலந்து உள்ளார்கள். திருஞான சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், நந்தனார் குறிப்பிடத்தக்கவர்.

இந்தச் சோதி நம் வாழ்க்கையோடு கலந்துள்ளது. வீட்டில் காலை மாலை வேளைகளில் விளக்கேற்றி வைப்பது மங்களமானது என்று நம்புகின்றோம். மாலை நேரம் திருமகள் வரும் நேரம் என்று கருதி விளக்கேற்றி வைக்கிறோம். எல்லா மங்கல நிகழ்ச்சிகளையும் விளக்கேற்றி வைத்துத் தொடங்குகிறோம். மங்கல நாணை மணமகள் கழுத்தில் மணமகன் கட்டும்போது காமாட்சிவிளக்கை வைத்துக் கொண்டுதான் கட்டப்படுகிறது.

திருக்கோயில்களில் விளக்கேற்றி இறைவனை வழிபடுவார்க்கு மெய்ஞ்ஞானம் உண்டாகும் என்றார் அப்பர் பெருமான் — ''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்'' மேலும் அடியார்களுக்கு இறைவன் கரும்புக் கட்டிபோல இனித்திடுவான் என்றார் அவர்.

''விரும்பிநல் விளக்குத்தூபம் வீதியினால் இடவல்லார்க்கு
கரும்பினில் கட்டி போல்வார் கடலூர்வீரட்டனாரே''

மேலும் நமச்சிவாய மந்திரமே சோதி என்றும் பாடியுள்ளார்.

''இல்லது விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே''

இவ்வாறு தோன்றியும் தோன்றாமலும் சோதியாய் விளங்கும் இறைவன் அடியார்கள் உள்ளத்தில் ஞான விளக்காய் நடம்புரிகிறான் என்பர்பெரியோர்.

''அன்பர் அகத்தாமரையின் மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே'' என்பார் குமரகுருபரர். ''ஞானச். சுடர் விளக்காய் நின்றாய் நீயே'' என்றார் அப்பர் தம் திருத்தாண்டகத்தில். அகத்தே குடியிருக்கும் அகந்தையாகிய ஆணவத்தை (கிழங்கை) அகழ்ந்து எடுத்து வெளியே எறிந்து விட்டு ஞானமாகிய விளக்கை ஏற்றவேண்டும் என்று கூறுகிறார் குமரகுருபரர் மீனாட்சி பிள்ளைத்தமிழில். ''அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு ஏற்றும் விளக்கே'' என்பது அவர்தம் வாக்கு.

வள்ளலாரும்

''அருளொளி விளங்கிட ஆணவமெனுமோர்
இருளை வென்றுனக் கேற்றிய விளக்கே
உள்ளொளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே''
என்று கூறியுள்ளார்.

''தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான் முகனும்
தேடித் தேடொணா தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்'' என்று அப்பர் பாடியுள்ளார். இதனால் இறைவன் சோதி வடிவாய் அகத்தே உள்ளார் என்பதை உணரவேண்டும்.

இந்த சோதி விளக்கு அணையாமல் எரிய வேண்டுமானால் ஐம்புலன்களாகிய ஐந்து சன்னல் களையும் அடைத்து விடவேண்டும். அதாவது ஐம் புலன்களையும் ஒரு நெறிப்படுத்தி இறைவன் பால் செலுத்த வேண்டும்.. இது எளிமையான செயல் அல்ல. ''அந்த ஐவரோ நம்மிலும் வலியர். என் செய்வது'' என்று வருந்துகிறார் அப்பர் அடிகளார். அதற்கு ஒரு வழியுள்ளது என்று திருஞான சம்பந்தர் கூறுகிறார்.

''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்ற நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே''

அஞ்செழுத்தான நமசிவாய, விளக்கு அணையாமலிருக்கத் துணை புரியும் என்றார். நாம் மறந்திருக்கும் போது, நம் மனத்துள் இந்த விளக்கும் ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்கிறார் அப்பரடிகள்.

''துஞ்சும்போதும் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை
நஞ்சு கண்டத் தடக்கிய நம்பனை
வஞ்சனேன் இனி யான்மறக் கிற்பனே''

இந்த ஞான விளக்கை ஏற்ற வழியும் கூறுகிறார் அப்பர்.

''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படும் ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமா காளை தாதை கழலடி காணலாமே.''

# நம்பி விட்டேன்!

## கர்ப்பதுன் கடமை.

**இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே**

**இதுவோ எமைஆளு மாறு
ஈவதொன் றெமக்கிலையேல்
அதுவோ உனதின் னருள்
ஆவடுதுறை அரனே.**

*—திருஞானசம்பந்தர்*

உடம்பு மனையாகிய இல்லம். அவ்வில்லத்தில் உள்ளமே அகல் விளக்கு. அறியாமை நீங்கக் காரணமாயிருக்கும் உணர்வே நெய். உயிரே திரி. இவற்றால் ஞானமாகிய தீயை ஏற்ற வேண்டும். பிறகு இருந்து நோக்கினால் இறைவன் திருவடியைக் காணலாம் என்று கூறுகிறார்.

இவ்வாறு இறைவனை வழிபடாத காரணத்தால்தான் அடிமுடி தேடிய அயன் திருமாலுக்குத் தன் காட்சியை சிவபெருமான் அருளவில்லை என்கிறார் திருஞானசம்பந்தர் தம் திருப்பெருவேளூர் திருப்பதிகத்தில்.

''சேணியலு நெடுமாலுந் திசைமுகனும் செருவெய்திக்
காணியல்பை யறிவிலராய் கனல் வண்ணரடியிணைக்கீழ்
நாணியவர் தொழுதேத்த நாணாமே யருள் செய்து
பேணிய வெம்பெருமானார் பெருவேளூர் பிரியாரே''

மாலும் அயனும் ''காண் இயல்பை யறிவிலராய்'' என்றதனால் முறைப்படி வழிபாடு செய்யாததுதான் காரணம் என்றார்.

அணையும் நிலையில் இருந்த விளக்கின் திரியைத் தூண்டிய எலிக்கு இறைவன் பெருவாழ்வு தந்துமகாபலிச் சக்ரவர்த்தியாக பிறந்து மண்ணையும் விண்ணையும் ஆளச் செய்து உள்ளார்.

ஆகவே ஞானச் சுடர் விளக்காய் இறைவன் விளங்குகிறான் என்றும், அச்சுடர் விளக்கை அறிய விடாமல் மறைப்பது அஞ்ஞானமாகிய ஆணவமலம் என்றும் இதை ஒழிப்பதற்கு மற்றொரு சுடர் விளக்கு தேவை எனறும் அதுதான் திருமுறைகளுக்கும் சாத்திரங்களுக்கும் கருப்பொருளாய் விளங்கும் அஞ்செழுத்து என்பதும் விளங்குகிறது.

பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி''

—அப்பர்பெருமான்

— — — — —

# கந்தவேள் கருணை

திருமுருக கிருபானந்த வாரியார்

[26]



திருச்செந்தூரில் தேவாதியரின் துயர்களைத் திருச்செவிமடுத்து இன்னல் தீர்ப்பதாக அபயம் அளித்த ஐயன் உடனே போருக்குப் புறப்பட்டுவிடவில்லை. ஏனெனில், இறைவனின் சக்தி சாந்தியிலேயே நிலைபெற்றது. சாந்தமான முறையில் சூரனுடைய தவறுகளைத் திருத்தவொண்ணாமல் போனாலே போர் புரிய வேண்டுமென எண்ணினார் சுவாமி. சாம-தான-பேத-தண்டம் என்றவாறு படிப்படியாகவே போருக்குச் செல்ல வேண்டும் எனக் கருதினார். எதிராளியின் நல்லெண்ணத்துக்கு முழு இடமும் அளிக்கத் திருவுளம் கொண்டார். எனவேதான் சூரனிடம் முதலில் பேசிப் பார்ப்பது எனக் கருதினார்.

''தூதன் சொற்கேட்டுச் சூரன் தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தால் அழியாமல் வாழ்வான். அவ்வாறு செய்ய மறுத்தால், தாமே சென்று அவனை யழிப்போம். இதுவே அறநெறி'' என்று கூறினார் ஷண்முகர். வானவரும் சுவாமி கருத்தை ஆமோதித்தனர்.

''நமது வீரர்களில் சூரமன்பனிடம் வீரமகேந்திர புரிக்குத் தூது செல்லத் தக்கவர் யார்?' என்று வேலவர் கேட்டார்.

''கந்தநாயக, தேவர்களின் நிலைமை தங்களுக்குத் தெரியாததல்ல. அடியேன் உட்பட வானவர்கள் அனைவரும் சூரனுக்குக் கைகட்டி ஏவல் செய்து வருகிறோம். ஆகவே, நம்மில் யாவரும் சூரனிடம் தூது சென்று உயிருடன் மீள முடியாது. வீரவாகு தேவர் ஒருவர்தான் தூது சென்றால் காரியத்தைச் சிறப்புற நிறைவேற்றிவிட்டுச் சூரனிடமிருந்து வெற்றியுடன் திரும்பி வரமுடியும்' என்று பிரம்மதேவர் கூறினார்.

ஐயனின் திருவுள்ளத்துக்கு உகந்த யோசனையாகவே அது அமைந்தது. தமது பேரன்புக்குரிய வீரவாகுவை அருள்கனிய நோக்கினார் ஆறுமுகன்.

''வீரவாகு, நீ வீரமகேந்திரபுரிக்கு விரைந்து சென்று சூரபன்மனை அணுகி, சயந்தனையும் தேவர்களையும், சிறையிலிருந்து விடுவித்து நல்வாழ்வு வாழுமாறு அவனுக்கு அறநெறியை எடுத்துக்கூறு, அவன் செவி சாய்க்காவிட்டால், அவனையும் அவனது சுற்றத்தையும் அழிக்க நாம் நாளையே படைகளுடன் வருவோம் என்று தெரிவித்து மீண்டு வருக'' என்று குமாரக் கடவுள் வீரவாகு தேவருக்குக் கட்டளையிட்டார்.

அப்பணியைத் தலை மேல் தாங்கி வீரவாகு தேவர் புறப்பட்டார்.

புத்திரவாத்ஸல்யம் மேலோங்கிய இந்திரன் வீரவாகு தேவரின் பின் சென்று, ''வீரரே, முதலில் வீரமகேந்திரத்தில் சிறைப்பட்டிருக்கும் என் குமாரன் சயந்தனையும் மற்ற தேவர்களையும் கண்டு ஆறுதல் கூற வேண்டும். பின்பு தூது செல்லும் வேலையை முடிப்பீராக'', என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

தேவர்கோனுடைய துயரத்தை அநுதாபத்துடன் புரிந்து கொண்ட வீரவாகு தேவர் ''அவ்வாறே செய்வோம். கவலைப்பட வேண்டாம்' என்று கூறிப் புறப்பட்டார்.

இலக்கத்தெட்டு வீரர்களும் அவரை வணங்கிப் பின் தொடரலாயினர்.

''நீங்கள் பூதப் படைத் தலைவர்களுடன் இருங்கள்'' என்று அவர்களுக்கு உத்திரவிட்டுப்



புறப்பட்ட வீரவாகு தேவர் கடற்கரையை அடைந்தார்.

வீரவாகுதேவர் தம் கால்களின் வீரகண்டை 'கலீர் கலீர்' என ஒலிக்கக் கந்தமாதன பர்வதத்தின் உச்சியில் ஏறி நின்றார். அவர் உற்சாகத்துடதுடன் திமுதிமு என ஏறி நின்றதும் அந்தப் பாரம் தாங்காமல் மலை பிளந்து நிலத்தில் அழுந்திவிட்டது. போரில் தோற்று ஓடிவந்து அந்த மலைக் குகைகளில் ஒளிந்து கொண்டிருந்த தாரகனின் படை வீரர்கள் வெளிப்பட்டனர். வீரவாகு தேவரைக் கண்டதுமே புலன்களெல்லாம் செயலிழக்க உயிரை விட்டனர். மகேந்திர புரிக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணிய வீரவாகுதேவர் 'கந்தநாயகா' என்று தியானித்தார். அகில புவனாண்டமாக விளங்கும் ஐயனின் பெருமையை உள்ளத்தில் இருத்தி அதனுடன் வீரவாகுத் தேவர் லயம் அடைந்தபடியால் அவருமே விசுவரூபம் கொண்டார்.

உலகங்கள் எல்லாவற்றையும் ஒருங்கே பார்க்கத்தக்க அளவில் பெரியதாக விளங்கினார் வீரவாகு தேவர். அங்கு நின்றபடியே உலகில் உள்ள நகரங்களையெல்லாம் பார்த்தார். சூரபன்மனின் பெரிய நகரத்தையும் நோக்கினார். அந்த நகரத்தையே கையால் பிசைந்து பகைவர்களையெல்லாம் கொன்றுவிடலாமா என்று ஓர் எண்ணம் தோன்றிற்று. சயந்தனும் மற்ற வானவரும் அங்குள்ள சிறையிலிருப்பதால் அந்நகர் முழுவதையும் நாசமாக்கலாகாது என்று தெளிந்து அந்த எண்ணத்தைக் கைவிட்டார். வீரவாகுதேவரின் பேருருவத்தைக் கண்ட அசுரர்கள், முன்பு அழிந்ததாகக் கூறப்பட்ட கிரௌஞ்ச மலைதான் இந்த மாயத்தைச் செய்கிறதோ என்று ஐயங்கொண்டனர், பிரமதேவர், இந்திரன், இலக்கத்தெட்டு வீரர்கள் மற்றும் பூதர்கள் ஆகியோர் வீரவாகு தேவரின் பேருருவத்தைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் வீரவாகுவோ தமது சக்தியில் பெருமிதமுறாமல், தமக்குச் சக்தி தந்த குமாரனையே ஸ்மரித்திருந்தார்.

''ஆவதோர் காலை எந்தை ஆறிரு
தடந்தோள் வாழ்க,
மூவிரு வதனம் வாழ்க, முழுதருள்
விழிகள் வாழ்க,
தூவுடை நெடுவேல் வாழ்க, தொல்படை
பிறவும் வாழ்க
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க
என்றான்''

இவ்வாறு ஆறுமுகக் கடவுளை வாழ்த்திய வண்ணம் வீரமகேந்திர புரத்தை அங்கிருந்தவாறே தமது விசுவரூபத்தால் நோக்கியவுடன் விசுவரூபத்தின் அவசியம் முடிந்ததென எண்ணினார், வீரவாகுதேவர். 'நான் இப்பேருருவத்துடன் சென்றால் உயிர்கள் அழியும்' என்று கருதி உருவத்தைக் குறுக்கிக் கொண்டார். பெரியோர்தான் பெருமையை எப்படிக் குறைத்துக் கொள்வது என்பதை அறிவர். அற்பர்களே தமக்குள்ள சக்தியை எப்போதும் பிரயோகம் செய்ய வேண்டும் என்று அலைவர்.

எளிமைக்கு உரிய பெருமையை உணர்ந்து சிறிய உருவம் எடுத்துக் கொண்ட வீரவாகுதேவர் கந்தமாதன மலையை முன் போலவே எழும்புமாறு அருள் செய்தார். பிறகு அம்மலையிலிருந்து வான மார்க்கமாகப் புறப்பட்டார் வீரவாகுதேவர். மீண்டும் எல்லையற்ற சக்தி அவரைத்தானாகவே வந்தடைந்தது. அவர் புவியிலிருந்து வானத்துக்குக் கிளம்பிய வேகத்தில் பூமியிலுள்ள மலைகள் பல இழுக்கப்பட்டு அவருடன் செல்லத் தொடங்கின. அண்டங்கள் பின் தொடர்ந்தன. உயிர்கள் சுழன்றன. வீரவாகுதேவர் கடலில் பாய்ந்துசென்ற தோற்றம்

சிவபெருமான் முப்புரத்தை நோக்கித் தமது திருவாய் எனும் வில்லில்பூட்டிய நெருப்புச் சிரிப்பு அம்பாகப் பாய்ந்ததை நினைவூட்டியது. 'கந்த வேள் சூரபன்மனை அழிக்க வேலாயுதத்தை விடுத் தாரோ?' என்று எண்ணும்படி வீரவாகுதேவர் கடற் பரப்பின்மீது வானவெளியில் தகதகவென்று ஒளிர்ந்தவாறு சென்றார்.

வீரமகேந்திரபுரத்தின் வடபுறம்உள்ள இலங்கை என்னும் நகரத்துக்கு அருகில் போய்ச் சேர்ந்தார் வீரவாகுதேவர். யாளிமுகன் என்னும் அசுர வீரன் இலங்கையைக் காவல்புரியும் பொறுப்புப் பெற்ற வன். வீரவாகுதேவர் அங்கே சென்றபோது, யாளி முகன் சூரபன்ம மகாராஜனைத் தரிசிக்க வேண் டும் என்று சேனைகளுடன் வீரமகேந்திர புரிக்குச் சென்றிருந்தான். அவனது மகன் அதிவீரன் ஆயிரம் வெள்ளம் சேனைகளுடன் காவல்புரிந்து வந்தான். அவன் அந்தப்புரத்தில் இருக்கும்போது வடக்கு வாசலில் நின்ற படைத் தலைவனாகிய வீர சிங்கன், வீரவாகுதேவர் இலங்கையுள் நுழைந்து விரைந்து உட்சென்று கொண்டிருப்பதைக் கண் டான்; ஐந்நூறு வெள்ளம் சேனைகளுடன் வீர வாகு தேவரை வழி மறித்தான்.

''உனக்கு உன் உயிர்மீது ஆசையில்லை போலி ருக்கிறது. அதனால்தான் நீ தனியாக வந்திருக் கிறாய். நான் உன்னைக் கொல்லுவதற்குமுன், இங்கு வந்த காரணத்தைச் சொல்லிவிடு'' என்று வீரவாகு தேவரிடம் ஆர்த்தான் வீரசிங்கன்.

''நான் வீரமகேந்திரபுரம் சென்று உயிருட னேயே திரும்பும் எண்ணத்துடன்தான் வந்திருக் கிறேன். உன்னால் என்ன முடியுமோ அதைச் செய்'' என்று வீரவாகுதேவர் கூறினார்.

''இவனைக் கொல்லுங்கள்'' என்று சேனை களுக்கு உத்தரவிட்டான் வீரசிங்கன். அவர்கள் வீரவாகுதேவரை வளைத்துக் கொண்டு ஆயுதங் களை ஏவிப்போர் புரிந்தார்கள். வீரவாகுதேவர் வாளாயுதத்தைச் சுழற்றிச் சுழற்றிச் சேனைகளை வெட்டிக் கொன்றார். அவுணர்கள் இறந்ததால் பெருகிய உதிரம் கடலில் போய்க் கலந்தது. வீர சிங்கனின் சேனைகள் எல்லாம் அழிந்தன. ஆத்தி ரங் கொண்டு எதிர்த்த வீரசிங்கனையும் எளிதில் சம்ஹாரம் செய்தார் வீரவாகு தேவர்.

வீரவாகுதேவர் இலங்கைக் கரையில் உள்ள மலையின் மூன்று சிகரங்களில் நடுச் சிகரத்தின் மீது பாய்ந்தார்.

வீரவாகுதேவர் இலங்கை மீது பாய்ந்து குதித்தவுடன் அதனைக் காவல் புரிந்திருந்த அதி வீரனும் பிற அசுரர்களும் நிலைகுலைந்து மயங்கி விழுந்தனர். அவுண வீரர்களுடன் இலங்கை கடலில் முழுகத் தொடங்கியது. கடலில் விழுந்த அசுரர்களைப் பெருமீன்கள் துன்புறுத்தத்தொடங் கின. சில அசுரர்கள் அஞ்சி ஓடி ஒளிந்தனர்.

இலங்கை கடலில் மூழ்குவதைக் கண்டுஅதைக் காவல் செய்து கொண்டு அரண்மனையிலிருந்த அதிவீரன் என்னும் அரச குமாரன் மிகவும் கோபங் கொண்டான். ''இந்தச்செயலைக் கரந்துதிரிகின்ற இந்திரனும் செய்யமாட்டான். மற்றைத் தேவர் களும் செய்ய மாட்டார்கள். நான் காவல் செய் வது நன்றாக இருக்கின்றது. இது தெரிந்தால் என் தந்தையும்,சூரபன்மனும் கோபிப்பார்கள்'' என்று எண்ணி கடலுக்கு மேலே வந்துபார்த்தான். வீர வாகுதேவரைக்கண்டு தன் சேனைகளோடு சூழ்ந்து எதிர்த்தான். பல ஆயுதங்களைக் கொண்டு போர்

## நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர்
வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர்
திருத்தாள் போற்றி.

செய்தான். நெடுநேரம் வாள் கொண்டு போர் செய்து வீரவாகுதேவரின் வாளுக்கு இரையாகி உயிர் துறந்தான்.

பின்னர் வீரவாகு தேவர் இலங்கையைவிட்டு எழுந்தார். அவர் வந்திறங்கிய வேகத்தில் கடலில் அழுந்திய இலங்கை அவர் எழுந்து சென்றதும் மீண்டும் பழைய நிலைக்கு உயர்ந்தது.

வீரவாகுதேவர் வான வழியில் சென்று மகேந்திரபுரியின் பெரும் மதில்களையும் உயர்ந்த கோபுரங்களையும் கூர்ந்து நோக்கினார். வடக்கு வாசலில் கோரன், அதிகோரன் என்ற இரண்டு அசுர வீரர்கள் காவல் செய்து கொண்டிருந்தனர். ஏராளமான யானைகள், தேர்கள், குதிரைகள், காலாட் படைகள் ஆகியவை அவர்களுக்கு இருந் தன. 'இந்தப் படைகளை வெல்ல வேண்டுமென் றால் பகல் முழுவதும் கழிந்துவிடும். மற்றும் இந்த நகரில் உள்ள இதர சேனைகளையெல்லாம் அழிக்க எவ்வளவோ காலம் ஆகும். அப்படியே அழித்தா லும் சூரமன்மன் வந்து எதிர்ப்பான். கந்தவேளை யன்றி வேறு ஒருவராலும் அவனைக் கொல்ல முடியாது. மேலும் தூதாக வந்த நான் போர் செய்து பொழுதைப் போக்குவது முறையன்று. வந்த வேலையைக் கருதிச் சூரபன்மனிடம் செல் வதேமுறை' என்று ஒப்பற்ற புத்தி நுட்பம்வாய்ந்த வீரவாகுதேவர் முடிவு செய்தார். பலத்த காவ லுள்ள வடக்கு வாயில் வழியாகச் சண்டையின்றிச் சீக்கிரத்தில் உள்ளே போவது அரிது என்று கருதிக் கீழ்த்திசை வாயிலை அடைந்தார். அங்கு மகிஷாட்சன் (மேதிக்கண்ணன்), வீரபானு என்ற இரண்டு அசுரத் தலைவர்கள் வாளும் கையுமாகக் காவல் செய்து கொண்டிருந்தனர். நால்வகைச் சேனைகள் அவர்களுக்குத் துணையாக நின்று கொண்டிருந்தன. ''இந்த வாசலைக் கடந்து செல்வதும் அரிது'' என்று கருதிய வீரவாகுதேவர் தெற்கு வாயிலை நோக்கிச் சென்றார்.

—(தொடரும்)



# கம்பரின் இராமாவதாரம்

டாக்டர் த. அமிர்தலிங்கம் [16]

இராமலக்குவனரை மரவுரிக் கோலத்தில் காண்பதும் மக்களின் துயரம், அணையை மீறிப் பொங்கும் வெள்ளம்போல் பாய்கிறது. அரச கோலத்தில் காணத் துடித்த இராமரைத் தவக் கோலத்தில் காணும் அவலம் நேரிட்டதைக் காணப் பொறுக்காத மகளிர் பலர் தம் கண்களைத் தம் கைகளால் ''பளார் பளார்'' என அடித்துக் கொண்டு 'ஓ' என்று அலறுகிறார்கள். இராமரின் பட்டாபிசேகக் காட்சியைக் காணும் ஆர்வத்தில் தம்மை விலையுயர்ந்த ஆடையணிகளால் அலங் கரித்துக் கொண்டு வந்திருந்த அம்மகளிர் இப் போது தம் அணிகலன்களையும் அறுத்து வீசி எறிவதோடு பட்டாடைகளையும்கூட களைந்து வீசிப் பழம்கந்தலை மட்டும் மானத்தை மறைக்கும் பொருட்டு அரையில் சுற்றிநிற்கின்றார்கள்.

மகளிர் நிலை இவ்வாறாக இராமர் மேல் அளவிலாதப் பற்றும் பாசமும் கொண்டிருக்கும் இளைஞர்களில் பலர் தம் கண்களைத் தாமே உடைவாளால் தோண்டி எறிகிறார்கள். இன்னும் பலர் தம் தலையைத் தம் ஒரு கையிலுள்ளவாளால் அறுத்து மற்றொரு கையில் அதை வைத்து அம்மானை ஆடுவதுபோல் உருட்டி விளையாடு கின்றார்கள். இராமரைப் பிரியும் வேதனைக்கு முன்பு அவர்களுக்குத் தம்மை தாமே ஊறுபடுத்திக் கொள்ளும் இவையெல்லாம் வேதனையாகத் தோன்றவில்லை என்று வருணிக்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

''இரு கையிற் கரிநிகர் எண்ணி றந்தவர்
பெருகையிற் பெயர்த்தனர் தலையைப் பேணலர்
ஒரு கையிற் கொண்டனர் உருட்டு கின்றனர்
துரிகையிற் கண்மலர் சூன்று நீக்கினார்''

இன்னும் பலர் ஆயுதங்களின் தேவைஇன்றியே இராமரைத் தவக்கோலத்தில் காணும் அதிர்ச்சி யில் தங்கள். இன்னுயிர் நீக்குகிறார்கள். இன்னும் பலர் எல்லையற்ற துயரத்தால் கண்ணீர் விடவும், கதறி அழவும் செய்யாமல் ''திக்பிரமை'' யுற்றுச் செயலற்று நிற்கிறார்கள். இராமருடைய தவக் கோலத்தைக் கண்டு அரக்கரால் துயருற்ற துன்ப மெல்லாம் தீரப் போகிறது என்று மகிழவேண் டிய தேவர்களும்கூட இராமர் வனம் செல்வதால் தமக்கு உண்டாகக் கூடிய இன்பத்தை எண்ணி மகிழாமல், வேதைனயில் மூழ்கி மனம் வெதும்பு கிறார்கள்; இன்னும் மறையவர்கள், முனிவர்கள், மன்னர்கள் முதலான பலரும் துடிக்கும் துயரத்தை நான் எப்படி வர்ணிப்பேன் என்று பாடுகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

''அந்தணர் அருந்தவர் அவனி காவலர்
நந்தலின் நகருளோர் நாட்டுளோர்கள்தம்
சிந்தையென் புகல்வது தேவர்உள்ளமும்
வெந்தனர் மேல்வரும் உறுதி வேண்டலர்.''


இவ்வாறு தேவரும், யாவரும் இராமர் கொண்ட தவக்கோலம் கண்டுக் கலக்கமே கொள் கிறார்கள். பலர் உயிர்விடுகிறார்கள். ஆனால் இராமர் மட்டும் தாமரை யொத்த தம்முகப் பொலிவு சற்றும் மாறாதவராய் தம் பிரிய மனைவி சீதையிடம் போய் விடை பெற்றுக்கொண்டு காடு செல்லும் நோக்கில் இலக்குவன் பின் தொடர அயோத்தியின் மாடவீதிகளில் நடந்து செல்கிறார். அயோத்தி நகர ஆடவர் பெண்டிர் அனைவருமே இராமரைப் பெருந்திரளாக பின் தொடர்ந்து வரு கின்றனர். ''இராமரைப்பின்தொடரும் இலக்குவன் ஒருவன் மட்டுமே அவனுக்கு உறவினன் அல்லன்; அயோத்தியில் வாழும் அனைவருமே அவனுக்கு உறவுதான் என்று கூறுவது போல் இருக்கிறது அக்காட்சி'' என்று வர்ணிக்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

''திருவரை சுற்றிய சீரை ஆடையன்
பொருவருந் துயரினன் தொடர்ந்து போகின்றான்
இருவரைப் பயந்தவள் ஈன்ற கான்முளை
ஒருவனோ இவர்க்கிவ்வூர் உறவென்றார் சிலர்.''

இராமருக்கு உற்ற துன்பம் கண்டும் தம் நெஞ்சம் பிளந்து போகாத அதிசயத்தை எண்ணி நோகும் பலர், கோடலி கொண்டு தம் கொடிய நெஞ்சத்தைப் பிளக்க வேண்டும் என எண்ணி கோடலியைத் தேடிப் போகின்றனர். அவ்வாறு போகும் வழியெல்லாம் கண்ணீர்ச்சேறு வழுக்குவ தால் அதில் வழுக்கி விழுந்து அவர்கள் தடுமாறு கின்றனர் என்றும் வர்ணிக்கிறார் கம்பர்.

''முழுக்கலின் வலியநம் மூரி நெஞ்சினை
மழுக்களிற் பிளத்தும்என் றோடு வார்வழி
ஒழுக்கிய கண்ணினிற் கலுழி யூற்றிடை
இழுக்கலின் இழுக்கிவீழ்ந் திடருற்றார் சிலர்'

''பல புதல்வர்களைப் பெற்றவனாயினும் அப் புதல்வர்களுள் ஊனமுள்ள ஒரு புதல்வன் துன்பம் காண்பான் ஆயின் அவனுக்காகவும் பாசமுள்ள தந்தை உயிர் கொடுப்பதுதான் உலகில் உள்ள



இயற்கை. ஆனால் பட்டத்திற்குரிய சிறந்தமகன், சத்தியம் தவறாத தெய்வமகன் இராமனை வனம் அனுப்பி இன்னும் உயிருடன் இருக்கின்றானே தசரதன், அவன் இதயம் என்ன இரும்பா''? என்றும் தசரதரின் உண்மை நிலையை உணராமல் அவரைப் பழித்துத் தூற்றுகின்றனர் பலர்.

''நிறைமக வுடையவர் நெறிசெல் ஐம்பொறி
குறைமகக் குறையினும் கொடுப்பராம் உயிர்
முறைமகன் வனம்புக மொழியைக் காக்கின்ற
இறைமகன் திருமனம் இரும்பென்றார் சிலர்.''

இவ்வாறு அயோத்தி நகர மக்கள் இராமருக்காகப் பலவும் கூறிப் புலம்பியவராய் அவரைப் பின் தொடர்ந்து வருகின்றனர். ஆங்காங்கே மாடங்களில் நின்று இராமலக்குவனர் நடந்து செல்வதைக் காணும் மக்கள் வேதனை மிகுதியால் கண்ணீர் விட்டு அரற்ற அக்காட்சி இராமனின் பிரிவாற்றாமல் மாளிகைகளும் கண்ணீர் வடிப்பதாகத்தோன்றுகின்றன என்று வர்ணிக்கிறார் கம்பர்.

''நன்னெடுங் கண்களின் நான்ற நீர்த்துளி
தன்னெடுந் தாரைகள் தளத்தின் வீழ்தலால்
அந்நெடுங் குமரனுக் கழுங்கி மாடமும்
பொன்னெடுங் கண்குழித் தழுவ போன்றவே.''

இராமரின் பிரிவுணர்ந்த அயோத்தி மாநகரமே பொலிவிழந்தது என்று கூறும் கம்பர் பட்டொளி வீசிப் பறக்க வேண்டியகொடிகளும் பறக்கவில்லை. முரசங்கள் முழங்கவில்லை., இன்னிசைக் கருவிகள் ஒலிக்கவில்லை; இல்லங்களில் உணவு சமைக்கப்படவில்லை; மணித்தொட்டில்களில் அழும் குழந்தைகளை எடுத்து அணைத்துக்கொள்ளவும் யாருமில்லை என்று விரிவாக வர்ணிக்கிறார். இன்பதுன்பங்களை இயல்பெனக் கொண்டு அவற்றால் மகிழ்தலும், வருந்துதலும் இலராகிய யோகியர்கள் கூட மரவுரி அணிந்து தம் மாளிகையை நோக்கி நடந்து வரும் இராமரின் நிலை கண்டு சொல்லொணாத்துயரம் கொண்டுவருந்துகிறார்கள்எனில் அயோத்தியின் துயரத்தை எப்படி என்னால் எடுத்துக் காட்ட முடியும் என்று வினவும் கம்பர், தசரதனைப் போலவே உயிர் உண்டா இல்லையா என்ற நிலையில்தான் இப்போது அயோத்தியும் தவிக்கிறது என்று வர்ணிக்கிறார்.

''ஒவுஇல் நல்லுயிர் உயிர்ப்பினோடு உடல்பதைத் துலைய
மேவு தொல்லழகு எழில்கெட விம்மல்நோய் விம்மத்
தாவில் ஐம்பொறி மறுகுறத் தயரதன் என்ன
ஆவி நீக்கின்றது ஒத்ததுஅவ் அயோத்திமாநகரம்.''

தசரத சக்கரவர்த்திக்கு பட்டத்துத் தேவியர் கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவர், இம்மூவரே அன்றி அறுபதினாயிரம் மனைவியரும் தசரதருக்கு உண்டு. அவர்கள் எல்லாம் ஒரு போதும் அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தது இல்லை. ஆகவே அவர்களை மக்கள் பார்த்ததும் இல்லை. ஆதவன்கூட பார்த்தறியாதவரான தசரதனின் தேவிமார்கள் அறுபதினாயிரம்பேரும் இப்போது இராமருக்கு உண்டானதுன்பம் அறிந்து பலரும் காணத் தம் மாளிகையை விட்டு வெளியே வருகிறார்கள். சீதையின் மாளிகைக்குச் சென்று அவளைக் கட்டிக் கொண்டு அழுகிறார்கள்.

அறுபதினாயிரம் மாமியர்கள் சீதையைக் கட்டிக் கொண்டுத் தங்கள் கண்ணீரால் அவளை நீராட்ட, சீதையும் ''தசரதருக்கு ஏதும் துயரம் உண்டாயிருக்குமோ'' என்று துணுக்குற்றவளாய்த் திகைத்து நிற்கின்றாள். அப்போதுதான் பிரதானிகள் மற்றும் தம்பி இலக்குவன் புடைசூழ இராமரும் மரவுரிக் கோலத்துடன் சீதையின் மாளிகைக்கு வந்து சேருகிறார்.

என்ன நிகழ்ந்தது என்பது ஏதும் அறியாதவளாய் சீதை இராமரை எதிர்கொண்டு வரவேற்று ''ஏனிந்த தவக்கோலம்? சக்கரவர்த்திக்கு ஏதும் துன்பம் நேர்ந்ததா?'' என்று தம் பவள வாய் திறந்து பரிவுடனே வினவுகிறாள். இராமரும் ''ஒப்பற்ற என்தம்பி பரதன் நாடாளப்போகிறான். நான் தாய், தந்தை இருவர் ஆணையைச் சிரமேற் கொண்டு காட்டிற்குப் புறப்படுகிறேன். வருந்தாமல் மீண்டும் நான் வரும்வரை நீ இங்கேயே இரு'' என்று கூறுகிறார்.

அரசுரிமை இராமருக்கு இல்லை என்பதும் இராமர் வனம் புறப்படுகிறார் என்பதும் சீதையை சிறிதும் வருத்தவில்லை. ''வருந்தாமல் நீஅயோத்தியிலேயே இரு'' என்று இராமர் கூறிய கொடிய சொல்தான் சீதையின் செவிகளைப் போய் தீயாய்ச் சுடச் சீதை தேம்பி அழுகிறாள். திருப்பாற்கடலுள் பள்ளி கொண்டிருந்த தன் கணவர் இராமராக அவதாரம் செய்தபோது, அவரை என்றும் பிரியாதிருக்க வேண்டும் என்பதனாலேயே பூவுலகில் வந்து சீதையாகத் தோன்றிய திருமகள் அவள். ''பிரிந்திரு'' என்று இராமர் கூறும் கொடிய சொல்லை, அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? நாயகன் சொல்லை ஆற்றிடவொண்ணாமல் சீதை துடிக்கின்றாள். ''தந்தையும் தாயும் இட்ட பணியை நீங்கள் தலைமேற்கொண்டு வனம் செல்ல துணிந்தது சரியானதே. ஆனால் என்னை எதற்காக நீங்கள் பிரிந்து செல்ல வேண்டும்? நானும்தான் உங்களுடன் வருவேன்'' என்று பிரிவுக்கு அஞ்சியவளாய் உயிர் பதைத்துத் துடிக்கின்றாள் சீதை.

இராமர் சீதைக்குச் சமாதானம் கூறுகிறார். ''செம்பஞ்சு ஊட்டப் பெற்ற நின் சிறிய மலர்ப் பாதங்கள் வலிய அரக்கர்களின் இருப்பிடமான காட்டில், இரவிலும் உருக்கிய அரக்கைப் போல் சுடுவதாம் பருக்கைக் கற்கள் மேல் நடக்கவல்லன அல்ல.''

''வல்லரக்கரின் மால்வரை மேல்விழுந்து
அல்லரக்கின் உருக்கழல் காட்டதர்க்
கல்லரக்கும் கடுமைய வல்ல நின்
சில்லரக் குண்ட சேவடிப் போதென்றான்.''

''இரவிலும் சுடும் காடு. அரக்கர்கள் வாழும் அஞ்சத்தக்க இடம் வேறு அது. ஆகவே நீ என்னுடன் வராதே'' என்று இராமர் கூற சீதையும் உடன் தயங்காமல் மறுமொழி கூறுகிறாள். ''காடு சுடும் என்று சொல்கின்றீர்களே! உங்கள் பிரிவை விடவா பெருங்காட்டின் வெப்பம் என்னைச் சுட்டுவிடும்? உலகை ஒருங்குப் பொசுக்க

வல்ல ஊழியரக்கனின் வெப்பத்தை விடவும் கொடியதான உம் பிரிவு வெப்பத்திற்கு முன், பெருங்காட்டின் வெப்பம் என்னை என்னசெய்யும்? ஆகவே இரக்கம் இன்றி என்னை விட்டுச் செல்ல வேண்டாம். நான் உங்களுடன் வருவேன்.''

''பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை ஊழி யரக்கனும்
எரியும் என்பன யாண்டைய ஈண்டுநின்
பிரிவினுஞ் சுடுமோ பெருங் காடென்றாள்.''

சீதை தம்முடன் வருவதாகக் கூறிக் கண்ணீர் பெருக்க என்ன செய்வது எனத் தோன்றாமல் இராமரும் திகைக்கிறார். அச்சில நொடிகளிலேயே அந்தப்புரத்திற்குள் செல்லும் சீதை, பிறர் உதவியின்றித் தனக்குத் தெரிந்தவரை தானே மரவுரியைச் சுற்றிக்கொண்டு விரைந்து வந்து இராமரின் கையைப் பற்றுகிறாள். ''நானும் வனம் வருகிறேன் வாருங்கள் போகலாம்'' என்றும் கூறுகிறாள். இராமருடன் வனம் செல்லும் சீதையின் துணிவான முடிவைக் காணும் தாய்மார்கள் பலரும் ''ஆஹா! இதுவல்லவோ பதிபக்தி'' என்று கூறிப் பரவசப் படுகிறார்கள். ஆனால் இராமரோ ''மேல் நிகழ்வனவற்றை நினைத்து நீ பார்த்தனையா? என்னுடன் வனம் வரும் உன்செயல் எனக்கு அளவற்ற துன்பங்களையே உண்டாக்கும்'' என்று கூறிமறுக்கிறார். ஆனால் சீதையோ தான் கொண்ட முடிவில் ஒரு சிறிதும் பின் வாங்கிடாதவளாய்'' ''என்னைக் கைவிட்டுச் செல்வது மட்டும் உமக்கு இன்பமோ?'' என்று வினவ, இராமர் அதற்குமேல் மறுப்பொன்றும் கூறாமல் சீதையை உடன் அழைத்துக்கொண்டு வனத்திற்குப் புறப்படுகிறார்.

கையில் வில்லைத் தாங்கி இலக்குவன்முன்னே செல்ல, மரவுரியைச் சுற்றியிருக்கும் திருமகளாம் சீதை பின்னே வர இராமர் வனம் புறப்பட்டுச் செல்கிறார். அக்காட்சியைக் காணும் மக்கள் துக்கம் பொங்கிக் கதறித் துடிக்கிறார்கள்.

''சீரைச் சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை இளையவன் முன்செலக்
காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்
வூரை உற்றதுணர்த்தவும் ஒண்ணுமோ?''

தசரதனின் தேவியர் அறுபதினாயிரம் பேரும் சீதையைப் பின் தொடர்ந்து இராமருடன் வனம் செல்ல முற்படுகிறார்கள். ஆனால் இராமர் அவர்களைத் தம் கைகளால் தொழுது ''தந்தையைத் தேற்றியிருங்கள். என் பின் யாரும் வரவேண்டாம்' என்று வேண்ட அவர்கள் அப்படி அப்படியே மூர்ச்சித்து விழுகிறார்கள். ஆனால் அயோத்தி மக்களோ இராமரின் வேண்டுகோள் ஒன்றையும் பொருட்படுத்தாமல் தாங்களும் இராமர் செல்லும் வனத்திற்கே சென்றுவிடும் தீர்க்கமான முடிவுடன் இராமரை முந்திக் கொண்டும் வனத்திற்கு விரைகிறார்கள்.

—(தொடரும்)

## வாசகர் எண்ணங்கள்

திருக்கோயில் இதழைப் பிரிப்பதுமே நான் முதலில் படிப்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியக் கருத்தோவியத்தைத்தான்.

எளிய இனிய நடையில் நம் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் முதல்வரின் எழுத்தோவியங்கள் சிறப்பாக உள்ளன.


**—இரா. கணேசன், ஈரோடு-638 006.**

o O o

கந்தவேள் கருணை, கம்பரின் இராமாவதாரம், சித்திர பாரதம், சிறப்புமிகு சிதம்பரம் உள்ளிட்ட பாடல்பெற்ற திருக்கோயில்களின் தலவரலாறுகள், சிந்தையில் இருத்தத்தக்க சிறந்த துணுக்குச்செய்திகள் அனைத்தையும் தாங்கிப் பழநிப் பஞ்சாமிர்தமாகத் தித்திக்கிறது ''திருக்கோயில்'' இதழ்.

**—இ.தயாளன், தாம்பரம், சென்னை-45**


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





ஆலயத் தூய்மைப் பேணுவதில் சென்ற ஆண்டின் சிறந்த ஆலயமாக மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேதகு ஆளுநர் அவர்கள் வழங்கிய சுழற்கோப்பையை ஆலயத் தக்காரும் துணை ஆணையாளருமான திரு கு. சிதம்பரம் பி.ஏ. அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். உதவி ஆணையாளர் திரு ஜி. இராஜநாயகம், பி.எஸ்சி. பி.எல்., உடன் உள்ளார்.

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவு நாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியில் மயிலை சட்டமன்ற உறுப்பினர் திரு ந. கணபதி பி.ஏ. பி.எல்., அவர்கள் கலந்து கொண்டார்கள். உதவி ஆணையாளர் திரு ஜி. இராஜநாயகம் பி.எஸ்சி. பி.எல்., உடன் உள்ளார்.



திருச்சி அருள்மிகு தாயுமானசாமி ஆலயத்தில் அலங்கார மின்விளக்கு அமைக்கும் திருப்பணியைப் போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் தலைமை தாங்கிய இவ்விழாவில் அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டார்கள்.